2

உ

சக்கம்மாள் துணை.

பாஞ்சாலங்குரிச்சி சிவத்தபாண்டியன், கருத்த பாண்டியன் கதாபிரசங்கம் செய்துவரும்

# கட்டபொம்முதுரை

## பாஞ்சாலங்குரிச்சி சரித்திரக் கதை.

(இரண்டாம் பாகம்.)



மதுரை, **M. E. M.**

பாஸ்கரசாமி அவர்களால்,

இயற்றப்பட்டது.

ஷியாரால் மதுரை ராஜேஸ்வரி பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

இதன் விலை] காப்பிரைட். [அணா எட்டு.

உ

சக்கம்மாள் துணை.

பாஞ்சாலங்குரிச்சி சிவத்தபாண்டியன், கருத்த பாண்டியன் கதாபிரசங்கம் செய்துவரும்

# கட்டபொம்முதுரை

## பாஞ்சாலங்குரிச்சி சரித்திரக் கதை.

(இரண்டாம் பாகம்.)



மதுரை, M. E. M.

**பாஸ்கரசாமி அவர்களால்,**

இயற்றப்பட்டது.

ஷெ யாரால் மதுரை ராஜேஸ்வரி பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

இதன் விலை] காப்பிரைட். [அணா எட்டு.

13 NOV 19

# முகவுரை.

பாஞ்சாலங்குரிச்சி நாட்டை அரசாட்சி செய்த கட்டப்பொம்மு ஊமத்துரையவர்களின் ஜீவிய சரித்திரத்தை பண்டைக்கால வித்வ சிரோன்மணியாகிய மணிமுத்துப் புலவரவர்கள் எழுதிய ஏட்டுப்பிரதி வசன காவியத்திலிருந்து மொழிபெயர்த்து என் சிற்றறிவிற்கெட்டிய வரையில் சிலவிதமான தன்னன சந்தங்களாகவும், பலவிதமான வர்ண மெட்டுகளில் பாடல்களையமைத்தும், நாடகரூபமாக நடிப்பவர்களுக்கும், கதா பிரசங்கம் செய்பவர்களுக்கும், ஏனையோர்களும் சுலபமாக படித்தறிந்துகொள்ளும்படி எளிய நடையில், இரண்டு பாகங்களாக எழுதி முடித்திருக்கிறேன். இதன் முதற்பாகம் வாசித்த நண்பர்கள் இவ்விரண்டாம் பாகத்தையும் வாசித்தால் கதையின் உண்மை விளங்கும்.

ஷை முதற்பாகத்திலும், இவ்விரண்டாம் பாகத்திலும், ஏதேனும் எழுத்துப் பிழைகள், சொற்குற்றங்கள் இருந்தாலும், வாசகர்களாகிய நண்பர்கள் அதனை பொறுத்துக்கொண்டு குற்றத்தை விட்டு, குணத்தைக் கொண்டு என்னை ஊக்கி ஆதரிப்பீர்களென நம்பும்,

உமது அன்புள்ள,

**M. E. M. பாஸ்கரசாமி.**

---

குறிப்பு:—இதில் பாடிவரும் 'தரு' வெல்லாம் தன்னன சந்தமாய் பாடவும்.

உ

ஜெய சக்கம்மாள் துணை.

# கட்டபொம்மு துரை

## பாஞ்சாலங்குரிச்சி சரித்திரக் கதை.

### இரண்டாம் பாகம்.

வெண்பா.

முத்திதரும் வித்தே மூலப் பழமறையே
சத்தியுமை யானின்ற சற்குருவே—எத்தனமும்
விக்கினங்க ளொன்றும் விளைந்திடா தோடிவந்து
தக்கவருளே தா.

---

பாதர் வசனம்—அடி பெண்ணே, என்புத்திகேட்பவர் எத்தனையோ கோடி; பெண்புத்தி கேட்பவன் நான்தானு பெண்ணே.

ஷ வசனம்—பெண்ணே நான் சொல்வதை நன்றாய் கவனிப்பாய்.

பாதர்—தரு

பனிரெண்டு சீமை பிடித்தவராம் பட்டாளத்திற்கேற்ற காலன்துரை
அக்கினியா யானுதிக்கும்போதே அரிவிமலே ஜலம்போலுதித்தார்
மலைபோலே யானும்பிறக்கும்போது சிருஉளிபோலே பிறந்தார் காலன் [துரை
யானைபோல் யானும் பிறக்கும்போதே ஒரு யாளியாய் பிறந்தா; காலன் (துரை
குருத்தாய் யானுமுளைக்கும்போதே பெண்ணே கும்பினியில் காலன் [தான் பிறந்தார்
காலன்துரை வந்தபோதே பெண்ணே காலம் முடிந்தது யெந்தனுக்கு
அவருட கையாலே மாண்டிடவே அமைத்தானீஸ்பரன் என்தலையில்
வெள்ளையர் கையாலே மாண்டிடவே விதித்தானே ஆதிபிரமதேவன்
என்றைக்கிருந்தாலும் சாவு தலைமேலே இருக்குதடி யெந்தன் பெண் (மயிலே

ஆரிலும் சாவுதான் நூரிலும் சாவுதான் ஆனல் சண்டைக்கும் போய் வாரேன் நானே.

வசனம்—பெண்ணே யான் இறந்தபின் செய்யவேண்டிய கிரியைகள் யாவையும் இப்பொழுதே நான் பார்க்கச் செய்துவிடுங்கள் பார்ப்போம் ஏதாவது ஒன்றுங்குறையக்கூடாது.

பாதர்வெள்ளைக்குக் கிரியைகள் நடக்கின்றது.

மண்டலத்தோராசை வீட்டு அய்யா—மாண்டிரோ மகாராஜா
கத்தரிக்காய் எங்களுக்கு சாமி—கைலாசம் உங்களுக்கு
பூசணிக்காய் எங்களுக்கு அந்த—புண்ணியலோகம் உங்களுக்கு
பாவக்காய் எங்களுக்கு அந்த—பரமலோகம் உங்களுக்கு
வெண்டக்காய் எங்களுக்கு அந்த—விண்ணகரம் உங்களுக்கு
சோற்றுப்பானை எங்களுக்கு அந்த—சொர்க்கலோகம் உங்களுக்கு
கஞ்சிப்பானை எங்களுக்கு அந்த—கைலாசம் உங்களுக்கு

வசனம்—ஆஹா! தெய்வமே என்ன செய்வோம். இனி எப்போது காணகப்போகின்றோம்.

காளி என்ற மெட்டு.

என்று காண்கப் போறேன் அய்யோயென்று—நாதா
என்று காண்கப்போறேன்
கொண்டகணவனைசை யின்றேடொளிந்ததையோ
பண்டிலேயானே செய்த பலனோ யிதுவரியேன் (என்று)

வசனம்—நாதா இச்சண்டாளி இன்று கண்ட திருமுகத்தை இனி யென்று நான் காண்கப்போகிறேன் நாதா.

ஷை பாட்டு.

மன்றில் பாவியானேனே—அய்யோ
மன்றில் நாதா மன்றில் பாவியானேனே
இன்றுகண்டமுகத்தை யென்றுநான் காண்பதையோ
மன்றி லென்னைப்போலே மரவர்குலத்திலில்லை (என்)
குன்று செல்வத்தில் பிறந்தேனே—நாதா குன்றுதுரையே
குன்று கொண்டயங்கோட்டை மரக்குலத்திலுதித்தவள்யான்
பண்டில் பாதருக்கென்றே—படைத்தானே
பிரமதேவன் (யென்று)

வெள்ளையம்மாள் வசனம்—நாதா தங்கள் பூரண சந்திரன் போன்ற முகாரவிந்தத்தை இந்தச் சண்டாளி யான் இனி யென்று காண்கப் போகின்றேன் நாதா யென் செய்வேன்.

பாதர் வசனம்—பெண்ணே தடை செய்யவேண்டாம்.

பாதர்—தரு

சிங்கிலிப்பட்டிவாழ் முத்தன்பகடைநீ சீக்கிரம் குதிரைகொண்டுவாடா
போருக்குக் குதிரையைக்கொண்டுவாடா நாமள் போகவேணு மன்னர்
(சண்டைக்கேதான்.

## துற்சகுனம்.

வெள்ளையம்மாள் வசனம்-நாதா தாங்கள் செல்லவேணுமென்று தெரிவித்த மாத்திரத்தில்,

தன்னன சந்தம்.

பொல்லாச்சகுனங்கள் காண்குதையோ போவதழகல்ல யென்கணவா
ஆகாச்சகுனங்கள் கண்டதினால் அய்யோ திரும்பவே மாட்டீர் நாதா
சாரை குறுக்கிடுதென் கணவா சற்பத்தடையாகா தென்கணவா
எண்ணைக்குடமொன்று தூக்கியல்லோ எதிரே வரக்கண்டேன் வாணி
(யனும்
கன்னி கழியாத பெண்ணொருவள் கையில் நெருப்பேந்தக் கண்டேன்
(நாதா
நரிகுறுக்கிடு தென்கணவா ஒற்றைப்பார்ப்பான் வாரானென்ன செய்
(வேன்.

வசனம்—நாதா ஆகாச் சகுனங்களாகுதென்ன செய்வேன் ஆயினு மிருக்கட்டும் தாங்கள் பிரியம்போல் செய்யுங்கள்.

தரு—மரவரின் குலதிலகனும் பாதர் மன்னவன் குதிரை யேருகுறார்
உலகெல்லாம் நடுநடுங்கிடும்படி ஓடுதே பாரிங்கு பேய்க்குதிரை.

வசனம்—அண்ணு இதோ வந்துவிட்டேன். நமஸ்காரம்.

கட்ட வசனம்—தம்பி பாதர் வாப்பா வா இதோ பார்த்தாயா தம்பி பட்டாளங்கள் கோட்டையைச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

பாதர் வசனம்—ஆம் அண்ணு பார்த்தேன், இதற்கு நாம் அஞ்சவேண்டியதில்லை.

பாதர்—தரு

இதற்கு நாமஞ்சியே போனாலண்ணா யேழனஞ் செய்வார்கள் பூமியிலே
பட்டாளத்திற்கஞ்சி போனாலண்ணா பாஞ்சாலி நாட்டிலே ஜோலி
(யென்ன
கும்பினிக்கஞ்சி நாம் போனாலண்ணா கோட்டையை விட்டுவே ஓட
(வேண்டும்
பட்டாளத்திற்கஞ்சியிருந்தோமானால் வேரறுப்பார்களே கும்பினியார்
ஆனது ஆகட்டு மெந்தனண்ணா அடுத்துவாருங்கள் பட்டாளத்தை
பட்டாளம் ஜெயித்திட திட்டமதாகவே பாதரொருபுரம் சென்றுவிட்
(டேன்.

கட்ட—தரு

மட்டில்லா கும்பினி பட்டாளம் ஜெயித்திட மன்னன் கட்டபொம்மு
(யிங்கு வந்தேன்.

ஊம—தரு

கோட்டைக்கதிகார சிவத்தையா பாண்டியன் கும்பினி பட்டாளம்
(ஜெயிக்க வந்தேன்.

கட்ட வசனம்—தம்பிகாள் எங்கு நிற்கின்றீர்கள்.

ஊம வசனம்—ஆஹா! கும்பினியார் ஜாஸ்தி இருக்கின்றார்களே!

ஊம—தரு

ஆவிபதருதே சக்கம்மாளே ஆதரிக்கவேணுமிந்தவேளை
அய்யைய்யோ யென்செய்வேன் வீரமல்லு அன்னிய நாட்டாரின்
(செய்கைகளை
கார்த்த குடிகளை கார்க்கவேண்டும் கைவிடலாகுமோ சக்கம்மாளே.

வசனம்—தாயே சக்கம்மாளே இதுவரையிலும் எங்களை பாதுகார்த்
தது பெரிதல்ல தற்சமயம் இந்த வெள்ளையர்களை ஜெயிக்கவேண்டும்
தேவி

ஊம—தரு

பட்டாளம் முற்றிலும் ஜெயித்திடவே பாஞ்சாலி யென்முன்னே வந்து
(நிற்பாய்
கூட்டபட்டாளம் ஜெயித்திடவே கூடத்துணையிரு சக்கம்மாளே.

வசனம்—ஆஹா அண்ணன் எங்கு நிற்கின்றாரோ தெரியவில்லையே.

கட்ட வசனம்—ஆஹா சக்கதேவி இந்தக் கும்பினியாருடைய துப்பாக்கியானது எவ்வளவு தூரம் போகின்றது.

கட்ட—தரு (தேவிசக்கம்மாளுன் என்ற மெட்டு.)

ஆவிசோரு தென்ன செய்வேன்
ஆதரியம்மா தேவி (ஆவி)
காவிலுரை தேவி யென்மேல்
கருணை செய்யவா (ஆவி)
ஆளி சூழுலக மெல்லாம்
ஆண்டவள் நீயே தாயே (ஆவி)
போடியாண்ட பூவையே நீ
போர் ஜெயிக்கவா அம்மா
மண்டலம் புகள்ளெம்மியம்
தண்டமிள் பாஸ்கரனுரை

வசனம்—இதோ இன்னேர்தரம் பாய்ந்து எல்லாம் ஜெயம் கொள்கின்றேன்.

## பாதர் பட்டாளமெல்லாம் மயங்கிய சமயம் அண்ணர்களைத் தேடி வருவது.

இந்த கும்பினி பட்டாளமெல்லாம் மயங்கிவிட்டது. இதோ கோட்டையை நாடிச்செல்கின்றேன்.

சக்கம்மாள் வசனம்—அப்பா பாதர்வெள்ளை நில்லு; நீ அங்கு போக வேண்டாம். போனுல் கெடுதல் நேரிடும்.

பாதர் வசனம்—சீ நீ யார்? என் கரத்தைப் பிடிப்பது செல்.

சக்கம்மாள் வசனம்—சரி நீ மாண்டிடக்காலம் நேர்ந்துவிட்டது. அதனுல்தான் என் கையைத்தட்டி கருவளையளை உடைத்துவிட்டாய் சரி போ.

கட்டன் வசனம்—அப்பா பாதர் இங்குவா; இங்குவா.

ஷை வசனம்—தம்பி சுந்தரபாண்டியா! என் கோட்டைக்கி வடபுரத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கின்றுன் பாதர். என்ன காரணமோ நாம் போகப்படாது. நில் கோபமாய் இருக்கின்றுன்.

ஊமை வசனம்—அண்ணு அவ்விதமல்ல. தம்பி பாதர்வெள்ளை இறந்து போய்விட்டான்.

கட்ட வசனம்—ஆ தம்பி என்ன இவ்விதம் தெரிவிக்கின்ருய்.

ஊம வசனம்—அண்ணு அதோ பாருங்கள்; கண்கள் இரண்டையும் கருங்குருவி கொத்துகின்றதே பார்த்தீரோ அண்ணு.

கட்ட வசனம்—ஆஹா சக்கதேவி யென்செய்வோம்.

கட்டபொம்மு வீருத்தம்.

அப்பா என் பாதருனே யெப்பநான் கண்டுன் ஆவலொளிவனடா தம்பி
சொற்பனத்திலுமரவேன் நீசெய்த நன்மைகளை தொல்புவியுள்ளளவும்
அர்பச்சண்டைதனில் ஆவிதனை போக்கினுய் அடடா சூரதீரா
எப்போது யெங்களிரு கண்களாலுனைக்கண்டு யேக்கம் தவிர்க்கப் போகின்ருேம்.

கட்ட—தரு (தன்யாசி ராகம்)

பாதருனே யிளந்து—பாரிலே யாளிருந்து
பலநெதுவோ தெரியேன்
ஆரினி வேருதவி
அய்யைய்யோ யென்ன செய்வேன்
காரிகை சக்கம்மாள் செய்
காரண வரமோ தெரியேன் (பா.தருனே)

வசனம்—அப்பா பாதர்வெள்ளை.

ஷ தரு

இன்றோடு யெந்தன் வீரம்
குன்றிடலாச்சுதே—என்று நான் காண்பேனப்பா
மன்றிலுனையைப் போலே—சென்றெங்கு பார்ப்பேனப்பா
கன்றிழந்த பசுபோல் கதரவைத்தாயே யப்பா (இன்)

கட்ட வசனம்—தம்பி பாதர்வெள்ளை நீ இவ்விதமிறப்பாய் என்று நான் கிஞ்சிற்றேனும் நினைக்கவில்லையே.

ஷ தரு

மரவர் குலந்தனை—மாணிக்கமாய் வந்த
மன்னு யென்செய்குவேன்
கரமளிக்கானேரு போல்
கரையேரினுயடா—நீ
தாமிகும் பாதரு—நீ
தாரதிலிராமலே. (பாத)

வசனம்—அப்பா பாதர்வெள்ளை இன்னும் கொஞ்சகாலத்திற்கு எங்களுக்குதவியாக இருக்கக்கூடாதா என் செய்வோம் தம்பி.

ஊமை வசனம்—அண்ணா என் வருந்துகின்றீர். நாமள்பாதர் வெள்ளையைப்போல் பதிலாள் பார்த்துக்கொள்வோம். நல்லடக்கம்செய்ய ஏற்பாடு செய்வோம்.

கட்ட வசனம்—தம்பி அப்படியே செய்வோம்.

## வெள்ளையம்மாள் புலம்புகின்றது.

தேவிசக்கம்மாளுன்—என்ற மெட்டு.

தாலி கட்டிக்கொண்ட நாதன் தானிறந்தாரே—அய்யோ (தாலி)
மாலையிட்டுக்கொண்ட நாதன் மாண்டு போகவோ—காலம் (தாலி)

வசனம்—அப்யோ என்நாதா தாங்கள் என் வார்த்தை கேளாதுவந்து இந்த கும்பினியார் கையிலேயா இறக்கவேண்டும். என் செய்வேன் தெய்வமே.

திருமாலின் மகனே—என்ற மெட்டு.

வெள்ளையம்மாள்—தரு

அய்யையோ என்ன செய்வேன் இனி யாரிடம் யானே உய்வேன்—
[பெரும்
அந்தகன்போலவே வந்தானே காலனும் யெந்த நாதனுயிரந்தரமாகவே
ஆவிபதருதையையா யெந்த னங்கம் புண்ணாகுதையோ—என
தாசைமன்னா உன் நேசவிட்டுவே மோசமதாக பாசம் வீசிட
மஞ்சளிழக்கவைத்த பெரும் மாபாவி காலன் துரை—இந்த
மண்டலத்தில் பனிரெண்டு நாடுகளை கண்டுபிடித்துமே செண்டாக்கள்
[நாட்டிய (மஞ்ச)
வல்லவர் காலன் துரை தனை வெல்லவா நீரும் வந்தீர்—அந்த
வண்டனாலேயான் முண்டையாவாக கண்டவரெல்வாம் விண்டுமே
[சொல்ல. (வல்ல)

வெள்ளையம்மாள் வசனம்—நாதா தாங்கள் பனிரெண்டு சீமைகளைப் பிடித்த காலன்துரையை செயிக்கலாகுமென்றுவந்து மாண்டுவிட்டீரே.

வெள்ளையம்மாள் — தரு.

தன்னன மெட்டு.

தாலி பரி போச்சே யென்ன செய்வேன் தார்வேந்தா உன்னை நானென
[ன்று காண்பேன்

மாலை பரி போச்சே யென்கணவா மண்டில் முண்டையானேன் யென்
[குணவா
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் மல்லிகைசெண்பகம் தானிழந்தேன்
பிஞ்சிலே யிவ்விதம் நானிருக்க பிரமனெழுதினு னென்தலையில்
பஞ்சைபோல் நின்றுமே யானிருக்க பார்க்கின்றுயோடி நீ சக்கமாளே
உன்னைப்போல் மங்கையானின்றழுக உன்மனம் கல்லோடி சக்கமாளே
உடன்கட்டையேறிட யானினைத்தேன் கடன்பட்டார் நெஞ்சம்போலே
[கசைந்தேன்

ஷெ வசனம்.

யான் யென் நாதனையிளந்து அரைக்ஷணமேனும் உயிர் தரிக்கேன் இதோ அன்னவருடன் உடன்கட்டை யேறிவிட்டேன்.

ஊமை வசனம்—அண்ணு வாருங்கள். நமது பாதர்வெள்ளைக்கு பதில் ஆள் பார்த்துவருவோம்.

கட்டன் வசனம்—தம்பி அப்படியே செய்வோம்.

கட்டன்—தரு.

பாதர்தனக்குப் பதிலாளும் தேடிட பாண்டியனேவாப்பா ஊமைத்துரை
குலத்துரோரமாம் நாகலாதபுரம் கொண்டு பொம்மு மக்கள் வந்து
[விட்டோம்
பாதர்வெள்ளையைப்போல் காணுமேடாதம்பி பாண்டியனே யென்ன
[செய்யப்போறும்.

நத்தக்காடு நடுக்காடு.

முத்தையாபாண்டியன் வசனம்-அண்ணமார்களே, தாங்கள் தனிமையாய் இங்கு புறப்பட்டு வரவேண்டிய காரணம் இன்னதென எனக்குப் புலப்படும்படி விபரமாய்த் தெரிவிக்கவேண்டும்.

கட்டப்பொம்மு (தன்னனச் சந்தம்.)

அய்யையோ நாங்களு மென்னசொல்வோமப்பா
அந்தகன்போலாணு மிந்தவேளை
கையில் வளர்த்ததோர் கிள்ளை தன்னையப்பா
பூனைக்கிரைக்கொடுத் தோடிவந்தோம்
வையகத்தி லிவ்வாறுண்டோ சொல் பாண்டியா
வல்லவன் பாதரைத் தானிழந்தோம்

பாதருக்குப்பதிலாளொன்று தேடிட பாண்டியனே வந்தோம் காடுநாடி
அன்னவனை யிழந்தாளுவது கோட்டை ஆகாது யெங்களாலெந்தன் [தம்பி.

முத்தையா பாண்டியன் (தன்னன சந்தம்.)

உண்டு இளைப்பாரி சென்றுமே வாருங்கோ உத்தமானதோரண்ணர் (களே
பாதருக்கு பதிலாளொன்று பார்த்துமே பாங்குடன் வாருங்களண்ணர் (களே

கட்டபொம்மு—தரு

நல்லது நாங்களும் சென்றுவாரோம் நத்தநடுக்காடு பாண்டியனே
உத்தம முத்தையாபாண்டியனே உதவிகளொன்றில்லாதோடிவந்தோம்
கட்ட வசனம்—தம்பி ஊமத்துரை பாண்டியா நம் பாதரைப்போல் ஆள் கிடைக்கவில்லையே என்ன செய்வோமப்பா.

ஊம—தரு

வருந்தாதீரெந்தனுடன் பிறப்பே அண்ணு வாருங்க காலாலகுடி போ (வோம்
சிறந்த சிவகங்கை தோணுதே யெந்தனண்ணு சிப்பாய் பாதர்போல் [பார்த்திடுவோம்.
வசனம்—அண்ணு சிவகங்கை ஊர் பூருவும் சுற்றிப்பார்த்தேன் நமது பாதர்வெள்ளையைப்போல் காண்கவில்லையே அண்ணு வாருங்கள் இந்தப் பனமரத்தடியில் சற்று நித்திரை செய்வோம்.
கட்ட வசனம்— தம்பி அப்படியே செய்வோம்.

சின்ன மருது—தரு

சிவகங்கை பூமியையாண்டதுரை சின்னமருதிங்கு வந்தனமே
கண்ணங்களவுபோர் சண்டையிலே கட்டுக்கடங்கா மருதுபாண்டி

பெரிய மருது—தரு

வல்லயப்போரிலே கெட்டிக்காரன் மரவர் குலத்திலகதீரன்
பெரிய மருது வசனம்—தம்பிகாள் யெழுந்திருங்கள் எனிவ்விதம் படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.
கட்ட வசனம்—அண்ணு மருதுபாண்டி நாங்கள் பாதர்வெள்ளைக்கு பதில் ஆள் பார்ப்பதற்காக வந்திருக்கின்ருேம்.

பெரிய மருது வசனம்—தம்பிகாள் இது என்ன பயித்தியகாரத்தனம் ஒருவன் வீரசூரனுயிருந்தால் அவன் மாதிரியே வேண்டுமென்று திரிந்தால் கிடைக்குமா கிடைக்காது. ஏன் வீண்பிரயாசை யெடுக்கின்றீர்கள். வேண்டாம் வாருங்கள் அரண்மனை சேருவோம்.

கட்ட வசனம்—அண்ணு மருது பாண்டியர்களே தாங்கள் எவ்விதம் சொன்னாலும் நாங்கள் சென்றுதான் வருவோம்.

பெரிய மருது வசனம்— சரி அப்படியானல் சென்றுவாருங்கள்.

கட்ட—தரு

சென்றுவருகின்றோம் மருதுபாண்டியா க்ஷேமநமஸ்காரம் தந்தோமிதோ

கட்ட வசனம்—அண்ணு சின்னமருது பெரியமருது பாண்டியர்களே சென்றுவருகின்றோம்.

மருதுகள் வசனம்—அப்படியே சென்றுவாருங்கள்.

கட்ட—தரு

தாகமெடுக்குதே ஊமத்துரைபாண்டி தண்ணீரெங்கு கிடைக்குமப்பா
நாவை சுழட்டுதே என்னசெய்வோம் தம்பி நல்லதண்ணீரகப்பட்டிடாது
மெத்த தாகமாகுதென்னசெய்வேன் அப்பா சித்தம்தளருதே யெந்தன்
[தம்பி.

பேரிக்காய் இளநீர் வியாபாரிகள்.

ஊமத்துரை வசனம்—அண்ணு இதோ யாரோ வியாபாரிகள் இளநீர் விற்கிறார்கள். அங்கு சென்று இளநீர் வாங்கி அருந்துவோம் வாருங்கள்.

ஷை வசனம்—ஓய் வியாபாரிகாள் இந்த இளநீர் காய்கள் என்னவிலை? எங்கே பார்ப்போம்.

வியாபாரிகள் வசனம்— அடே பான்சோத் என்ன சும்மா சும்மா எடுத்தெடுத்து வெட்டி வெட்டி சாப்பிடுகிறீர்கள்.

ஊம வசனம்—அண்ணு என்ன இவர்கள் தாருமாராய்ப் பேசுகிறார்கள். இவர்கள் பேரில் சண்டைக்கு ஆரம்பித்துவிடுவோம்.

கட்ட வசனம்—தம்பி அவ்விதம் செய்தோமானல் பட்டாளங்களுக்குத்தெரிந்து வந்துவிடுவார்களே.

ஊம வசனம்—வந்தால் வரட்டும்.

கட்ட வசனம்-தம்பி இந்த ஆற்றில் தண்ணீர் அருந்துகொள்வோம்வா

தரு—வடக்கே யேரிட்டுப்பாரடா தம்பிநீ வருகுது பட்டாளம் ஒன்று
(போலே

ஊமை—தரு

அண்ணரே நீயொருபுரம் நில்லும் நான் அடுத்து வெல்லுறேன் பட்
(டாளத்தை
மன்னவா நீரொருபுரம் ஜெயிப்பீர் இதோ மயங்கிடச்செய்கிறேன்
ஊமத்துரை.

பெரிய துரைக்கு கட்டபொம்மு ஊமத்துரை லேட்டர் எழுதுதல்.

உங்கள் பட்டாளம் எங்களை எதிர்த்தார்கள். அவர்களை சக்கம்மாள் கிருபையால் இரண்டுமெணிநேரம் எழுந்திரிக்காத விதமாய் மயங்க செய்துவிட்டோம். இப்படிக்கு,

கட்டபொம்மு ஊமத்துரை.

பெரிய துரை வசனம்—ஆஹா இவர்களுக்கு என்ன ஊக்கம். இருக்கட்டும் நான் பார்த்துக்கொள்கிறேன்.

ஷை வசனம்—ஏ சேவகா அந்த தெட்சண பூமியைச்சேர்ந்த நாடுகளுக்கெல்லாம் பரையறிவித்துஅந்தக் கட்டபொம்மு ஊமத்துரையைப் பிடித்துக்கொடுத்தவருக்கு ஆயிரம் ரூபாய் இனம் கொடுக்கப்படும் என்று தெரிவிப்பாய் நீ சென்றுவா.

தமுக்கன் வசனம்—அய்யா பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு ஊமத்துரை இவர்கள் இரண்டுபேரையும் பிடித்துக்கொடுத்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனம் கொடுப்பதாக திட்டம் செய்திருக்கின்றார்கள். அய்யாமாரே ஆச்சிமாரே யாராவது கண்டால் பிடித்துக்கொடுக்க வேண்டியது.

ஊமை—தரு

விருப்பாச்சி நாடியேசென்றிடுவோம் வேந்தனேயெந்தனுடன்பிறப்பே

கட்ட—தரு

மட்டில்லாதபசியாகுதப்பா கட்டழகா ஊமை பாண்டியனே.

ஊமை—தரு

சுத்தவீரத்தனமுள்ளவர்க்குஅண்ணா மெத்தபசிசோம்பலாகுமோதான்

கட்ட—தரு

கால்களயர்ந்துமே போகுதடா தம்பி கண்கள் பஞ்சடையுதே என்ன
(செய்வேன்.

ஊமை—தரு

அண்ண உணவுகளில்லாவிட்டால் அண்ணா ஊக்கமும்தான்குறையுமோ
(சொல்வாய்

கட்ட—தரு

என்ன செய்வேனப்பா ஊமத்துரை என்னால் சகித்திடலாகாதப்பா

கட்ட வசனம்—தம்பி சிவத்தையா பாண்டியா என்னால் பசி தாங்க முடியாது. நீ சற்று நில்லு அதோ ஏர் உழுதுகொண்டிருக்கின்றார்களே அவர்களிடம் கூழ் வாங்கி வுண்டுவருகின்றேன்.

ஊம வசனம்—அண்ணா யானும் கூடவருகின்றேன்.

கட்ட வசனம்—தம்பி நீ வரவேண்டாம் ஏனென்றால் நீ அதிக கோபக்காரன் அவர்கள் ஏதாவது சொன்னால் உனக்கு கோபம்வந்துவிடும் ஆகையால் நீ நில்லு நான் சென்று கைதூக்குவேன் அப்போதுவா.

கட்ட—தரு

காட்டிலே கஞ்சிக்கலைந்திடவே காலம் வந்ததோ சக்கம்மாளே
வாட்டமுற்றலைய யென்னசெய்வோம் வல்லவளே தாயே வீரமல்லு
கோட்டையாண்ட நாளெல்லாம் போச்சோ கொற்றவளே யம்மா
(பெற்றதாயே
நாட்டை யெல்லாம் ஆண்டநாளும் போச்சோ நாங்களென்னகுறை
(செய்தோமம்மா

கட்ட வசனம்—யாரைய்யா ரெட்டிமார்களே எனக்கோ பசி அதிகமாயிருக்கிறது. கொஞ்சம் கூழ் கொடுங்களப்பா.

ரெட்டி வசனம்—ஓரே அப்பா ரெட்டி குப்பரெட்டி சுப்பா ரெட்டி யேமீரா யிப்பின்னுண்டு செப்புதாடு.

குப்பாரெட்டி வசனம்—யேமி சமாச்சாரமோ நேக்குத் தெலுசுலேதுடா போரா தொங்குபின்னுண்டு தா தா தா.

அப்பாரெட்டி வசனம்—போப்பா போ இங்கே கூழுயில்லை.

கட்ட வசனம்—அய்யா ரெட்டிமார்களே பசியோ கொடுமையாயிருகின்றது கொஞ்சம் கொடுங்களப்பா.

குப்பாரெட்டி வசனம்—ஏண்டா சும்மா போகிறாயா என்ன சொல்கிறாய்.

கட்ட வசனம்—அய்யா இவ்விதக்கோபம் வேண்டாம். ஏதுவோகள் சாப்பிடுகிறதில் எனக்கும் கொஞ்சம் கொடுங்கள்.

அப்பாரெட்டி வசனம்-ஏண்டா போகவில்லை போடா போடா போட

குப்பணத்தேவன் வசனம்—அய்யோ பாவம் யாரோ தெரியவில்

ராஜரீகத்தார் போல் தெரிகின்றது அய்யா வாருங்கள் யான் ச

சூழ்கும் குப்பணத்தேவன் இதோ எனக்கிருக்கும் கூழ
கொஞ்சம் தருகின்றேன் சாப்பிடுங்கள்.
கட்ட வசனம்—சரி அப்படியே சாப்பிடுகின்றேன்.
ஊம வசனம்—அண்ணு இங்கு நடந்த விஷயமெல்லாம் ந
யிருந்து பார்த்துக்கொண்டுதானிருந்தேன். இந்த ரெட்டிய
என்ன கெர்வம்.

ஊம—தரு

அண்ணரை நீங்களடித்தவிதமதை அரையவேணுமே யிந்தவேளை
இன்னவிதமென சொன்னாலே விடுவேன் இல்லாவிடில் துண்டு துண்
(டாக்குவேன்.

வசனம்—அடே என்ன தெரிவிக்கின்றீர்கள்?
ரெட்டி வசனம்—அய்யா நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. கூழ் கேட்
டார் இல்லை என்று சொன்னோம்.
ஊம வசனம்—ஓகோ இல்லையென்று சொன்னீர்கள்.

ஊம—தரு

துண்டுதுண்டாகவே வெட்டுறேன் பாரடா துடிதுடித்துயிர் பறக்கவே
ஆறென்று மதித்து தாறுமாருகவே அடித்தீரே படுமூடர்களே.
ஊம வசனம்—குப்பணத்தேவரே என்னருகில் வாருங்கள் வாருங்கள்.

ஊம—தரு

பாருங்களிவர்களுயிர தனையே பரமலோகம் காணவனுப்புறேன்.
ஊம வசனம்—குப்பணத்தேவரே இவர்களெல்லாரும் இறந்துபோய்
விட்டார்கள். தாங்கள் இந்த பூமியை அரசாக்ஷி செய்துகொள்ளுங்
கள். நாங்கள் சென்றுவருகின்றோம்.

குப்பணத்தேவர்—தரு

இன்றைக்கிருந்து வுணவருந்தி அய்யா சென்றிடலாம் யெந்தவப்
(பாண்டியரே
யென்றென்றும் யானும் மறக்கமாட்டேனைய்யா யெந்தனுக்கு நீங்கள்
(செய்த நன்மை
பண்டிலே யான்செய்தபலனிதோ அய்யா பட்டம்வர வுங்களாலெனக்கு
குப்பணத்தேவன் வசனம்—மகாராஜா தாங்களால் யான் மேன்மை
யடைய பூர்வீக காலத்தில் செய்தபுண்ணியம் சென்றுவாருங்கள்.

# கட்டபொம்மு துரை

ம்—தம்பி விருப்பாச்சி இதோ தெரிகிறது. குதிரையை
விடுவாய்ச் சென்றிடுவோம்.

கட்ட—தரு

ச்சி யிதோ கண்டுகொண்டோம் விரைவாய்வருவாய் யெந்தன்
(தம்பி

படா திருமேனியனே மட்டிலடங்காத ஊமத்துரை

ட வசனம்—தம்பி சூரியனே மறைந்துவிட்டான் இருளானது மூடிக்கொண்டது. காற்றும் மழையும் வீசியடிக்கின்றது. ஆகையால் இந்த விருப்பாச்சி என்றவூரில் இன்று தங்கியிருந்துபோவோம் தம்பி.

ஊம வசனம் அப்படியே செய்வோம் அண்ணு.

கட்ட வசனம்—விருப்பாச்சி ஆளும் பால்ச்சாமி இன்று இரவு நாங்கள் தங்குவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

பால்ச்சாமி வசனம்—சரி தாங்கள் இந்தரும்பிலிருந்துகொள்ளுங்கள்.

கட்ட வசனம் அவ்விதமே இருந்துகொண்டோம்.

பால்ச்சாமி வசனம்—பேஷ் நல்லயோகம் வருங்காலம் மெய்வருந்த வேண்டாமென்று ஔவையார் அருளிச்செய்த வாக்கியப்பிறகாரம் நமக்கு முன்னடியே கட்டபொம்மு ஊமத்துரையைப் பிடித்து தருபவர்களுக்கு நிலங்களும் 1000 ரூபாயும் இனாம்கொடுப்பதாகபரையறைவித்திருக்கிறார்கள். இதோ சென்னைக்கு லெட்டர் எழுதுகிறேன்.

பால்ச்சாமி சென்னைக்கு லெட்டர் எழுதுகிறான்.

மகா-ா-ா-ஸ்ரீ சென்னை துரையவர்களுக்கு விருப்பாச்சி பால்ச்சாமி எழுதிய கடிதம். கட்டபொம்மு ஊமத்துரையைப் பிடித்துவைத்திருக்கிறேன். உடனே பட்டாளங்கள்வந்து பிடித்துக்கொண்டு போகவேண்டியது.

இந்தப்படிக்கு,

விருப்பாச்சி பால்ச்சாமி.

கட்ட வசனம்—ஓய் பால்ச்சாமி பசியோ உயிர் பிரிந்துவிடும்போல் தெரிகின்றது கொஞ்சம் சாப்பாடிருந்தால் கொடு.

பால்ச்சாமி வசனம்—இதோ கூழ்இருக்கின்றது கொடுக்கவா?

கட்ட வசனம்—கொடுங்கள்.

பால்ச்சாமி வசனம்—இதோ சுடு கூழை ஊற்றுவோம் குடித்துவிட்டு சாகட்டும்.

ஊம—தரு

பட்டகேள்வரகு கூழுக்கு கைநீட்ட விட்டாளே சக்கம்மாளிந்தவேளை
தொண்டக்குழியிலே சிவனிருந்தாலும் தோக்கலவார் வீரம் போய்
[விடுமோ
யென்றபழமொழி கண்டிருந்துமண்ணு யேத்துறீர் கைதனை கூழென்
(றுமே

ஊம வசனம்—அண்ணு தொண்டக்குழியில் சிவனிருந்தபோதிலும் தோக்கலவார் குலம் வீரம் போய்விடுமோ அண்ணு தாங்கள் இவ்விதமாய்ப் புலம்புவது எனக்கே வெட்கமாயிருக்கிறது.

அக்கினி ஜென்னல் பட்டாளங்கள் வசனம்.

ஓ பால்ச்சாமி கட்டபொம்மு ஊமத்துரைக்கி பிடித்தது யென்று லெட்டர் வந்தது எங்கே அவர்கள்?

கட்ட—தரு

கோட்டையைவுடையடா ஊமத்துரை அதோ கும்பினி பட்டாளம்
(வந்திட்டதே
விரட்டிமயக்கடாஊமத்துரைஅந்த படைகள்அப்புரம் பள்ளத்தில்விழ
பட்டா வாளெடடா ஊமத்துரை நாமள் பட்டாளம் வெரட்டிஜெயம்
(பெறவே
திறட்டிஜெயிக்க ஊமத்துரை அவர் திரும்பிஊர்போக சீமைதேடி
மயங்கிவிட்டார்களொன்றுபோலே நாமும் மல்லப்புரம் காடுவழிபோ
(வோம்.

கட்ட—தரு

காடுசெடிமலைதான்கடந்தோம் தம்பி கண்டுகொண்டோம் மல்லப்புரம்
(காடு
குதிரை நடையுங்குறைந்துபோச்சே தம்பி கொற்றவா நாமென்ன
(செய்வோமப்பா
ஓடையைத்தாண்டும்பொழுதே குதிரையின் ஓட்டம்குறைந்ததேயென்
(பிறப்பே
பள்ளத்தைத்தாண்டமுடியாமல் குதிரை பட்டதுன்பமென்னசொல்
(வேனப்பா
இருளோங்கிய பெருங்கானகத்தில் தம்பி யேகமழைபெய்யுதென்ன
(செய்வோம்.

ஊம வசனம்—அண்ணு என் குதிரையை முன்நடத்திக்கொண்டே

சப்தம் கொடுத்துக்கொண்டே போகின்றேன். தாங்கள் அந்த சப்த தொனியை யறிந்து குதிரையை மெதுவாய் நடத்திக்கொண்டே வாருங்கள்.

மல்லப்புரங்காடு வழிமாறி போகுதல்.

ஊம வசனம்—அண்ணு அண்ணு அண்ணு ஆஹா எங்கையோ வழி மாறிப்போய்விட்டாரே யென்செய்வேன்.

ஊம பாட்டு. பட்டாபிஷேகம்—என்ற மெட்டு.

மல்லப்புரங்காட்டில் மெள்ளநடவென்ன வல்லவரண்ணரைக்காணேன்
(காணேன்

ஊம வசனம்-அண்ணு தாங்கள் மெதுவாய் குதிரை நடத்திவருவதாய் சொல்லி எங்கு சென்றீர்கள். அய்யோ!

ஷ ஊமதரு.

அய்யையோ எந்தனிணுவிபதருதே அண்ணு உனையென்று காண்பேன்
[காண்பேன்

ஊமவசனம்-அண்ணு! தாங்களை யென்று காண்கபோகின்றேன்,

ஊம தரு.

கொண்டுபொம்மு மக்கள் நாமள் ரெண்டுபேரும்
கன்றிழந்தபசு வானேம்—அண்ணு ஆனேம்

ஊம வசனம்—மல்லபுரம்காட்டில் நமது அண்ணனை விட்டு விட்டு நாமள் தனிமையாய்நின்று புலம்புவதில் என்ன பிரயோஜனம். எங்கே யாவது சென்று பார்ப்போம்.

கட்டன் வசனம்-ஆஹா! நமது மூத்துவர்ணமாகிய குதிரையுமிறந்து போய்விட்டது. தம்பி ஊமத்துரை பாண்டியனையும், மல்லபுரம் காட்டில் பிரிந்துவிட்டோம். இனி யென்ன செய்வோம்.

கட்டன் தருபட்டாபிஷேகம்—என்ற மெட்டு.

என்னசெய்வேன் தம்பி யேது செய்வேன் தம்பி
யேங்குதே என்மனம் தம்பி! தம்பி,

கட்டன் வசனம்—தம்பி சுந்தரபாண்டியா உன்னை யென்று காண்கப் போறேனப்பா.

கட்டன் தரு.

தாயற்றபிள்ளைபோ லானேனடா அப்பா நீகைவிட்டேகவே தம்பி
[தம்பி

கட்டன் வசனம்.

தம்பி நீயெனை மல்லப்புரங்காட்டில் விட்டுப் பிரிந்தபோதே தாயற்ற பிள்ளைபோல் தவிக்கின்றேனப்பா.

கட்டன்—தரு.

பண்டில்யாம் செய்த பலனிதுவோ தம்பி
ஒண்டியாய் யானு முளரிதவித்திடதம்பி என் தம்பி

கட்டன் வசனம்.

ஆஹா அந்த சக்கதேவிக்கி யென்ன குறைவுகள் செய்தேன். இவ்விதம் சோதிக்கின்றாள். சரி நாம் தனிமையாய் நின்று புலம்பிக்கொண்டிருப்பதில் யாது பிரயோசனம். இந்த தொண்டமான் புதுக்கோட்டையை நாடிச்செல்வோம்.

கட்டன்—தரு மூர்த்தியாய் யென்றமெட்டு.

சக்கம்மாள் தோத்திரம்.

ஆண்டவளே வீரசக்கு ஆதரியம்மா யம்மா அம்மா அம்மா

அநுபல்லவி,

வேண்டினேன் உன்பாதம்—வேறு துணையில்லாது
தாண்டவமாடுஞ்சக்க தேவி கண்பாரு பாரு பாரு
கோடாங்கி பட்டியாண்ட கோலவிளி சக்கம்மாளே
ஆடல்பாடல்புரிய அருள்செய்ய வேண்டும் வேண்டும்
பாடகம்பூண்ட யெங்கள் பாஞ்சாலி வாருமம்மா
தாடதகையான கௌரிதனையனைக் காவா காவா காவா
திருக்கூடலெம்மியம் செந்தமிழ் பாஸ்கரன்சொல்
அருள்கடலே அளித்து யாதரியம்மா யம்மா யம்மா

புதுக்கோட்டை கட்டன் வசனம்.

மான்ராஜா! என்தம்பியாகிய ஊமத்துரைபாண்டியனிங்கு வந்தானு?

ராஜா வசனம்.

ஆம் கட்டபொம்மு யிங்குதான் வந்தார். தாங்கள் யிங்குதேடி வருவீர்களாம். வந்தால் யிங்குயிருக்கும்படி சொன்னார். ஆகையால் இருங்கள்.

கண்டாங்கிமேஷர் வசனம்.

ஓ மான்ராஜா இங்கு பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு ஊமேத்துரை வந்தார்களா?

மான்ராஜா வசனம்.

இதோ இந்த ரூமில் இருக்கின்றார்கள்.

கண்டாங்கிமேஷர் வசனம்.

யாருக்குத்தான் என்றமெட்டு.

கட்டபொம்மு—தரு

அம்பாள் துணையல்லால் இந்த
அவனிதனிலேவேறு யாருதவிசொல் [அம்பாள்துணை]
கம்பளத்தார்குலம் காக்கவே வந்த
கௌரி பைரவியே
அம்பல நாடக மாடியதேவி
அரவணி பவனுட னிடபாகங்கொண்ட [அம்பாள்துணை]

கட்டன் வசனம்—அம்பிகாதேவி சக்கம்மாளே உன்

கட்டன் ஷைபாட்டு

செம்பொற் பாதந் தா உன்
சேவடி தொழுதிடவா ஓடிபடிமீது
பைம்பொன்ஞெலியும் தகதகவெனவே
பரமகிருபாகரி யென்முன்னே வரவே
கும்பினி படைகளிங்கன முரவே
குடல்நடு நடுங்கிடுதடியே நானென் செய்வேன் [அம்பாள்துணை]

கட்டன் வசனம்—தாயே சக்கம்மாளே இந்தவேளை யென்வாள்முனை யில் நின்று இந்த பட்டாளத்தை ஜெயிக்கவருள் செய்வாயம்மா.

சக்கம்மாள் அசரீரி வாக்கு வசனம்.

அப்பா கட்டபொம்மு நீ இந்தபட்டாளத்தில் பாதிதான் ஜெயிப் பாய். அதன்பின் உன்னுடைய யட்டா வாளானது தவரி விழுந்து விடும். அந்த மட்டோடு உனக்கு ஆயுள் முடிவாகிவிட்டது அப்பா!

கட்டன் வசனம்—தேவி பரமகிருபாகரி யான் யிவ்வளவு சுத்தவீரத் தனமாய் யிருந்துவிட்டு இந்த படைகள்கையில் யான் மாளப்படாது. என்னுடைய உயிரானது கயற்றார் கட்டப்புலியில் யென்கையாலேயே யானிறந்துபோகும்படியாய் உத்திரவளிப்பாய் தேவி.

அசீரீரி வாக்கு

அப்படியே அளித்தேன் பட்டாளத்துடன் சண்டைசெய்.

கட்டன் வசனம்—நாமிறந்துவிடுவதோ நிச்சயம். இந்தபட்டாளத்தை லேசாய் விடப்படாது.

கட்டன் தரு

பட்டாளம் ஜெயிக்கவேயான் துணிந்தேனெனைப் பாதுகார்க்கவேண்
(டும் சக்கதேவி

கூட்டப்பட்டாளம் வென்றிடவே கூடவுதவிசெய் சக்கதேவி
மேலமலையாளம் ஆண்டவளே—இந்த வேளைவரவேணும் சக்கதேவி
கட்டன் வசனம்—ஆஹா வாள்தவரிவிட்டதே யென்செய்வேன்தேவி

ஷெவசனம்

ஓ துரைகளே யென்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

கண்டாங்கிமேஷர் வசனம்

ஓ பட்டாளம்! கட்டேபாம்பு நமக்கு யேக்கிது கிட்டேபோனு வெரடிப்போடும் யேக்கிது யேக்கிது.

கட்டன் வசனம்—துரைகளே அவ்விதமல்ல

கட்டன் தரு

தவரின வாளை யெடுக்கமாட்டேன்—அய்யா தாஷ்டிகன் சண்டையும்
(போடமாட்டேன்

விழுந்தவாளை யெடுக்கமாட்டேன்—இப்ப வீரனும் சண்டை யான்
(போடமாட்டேன்

போட்ட வாளையான் யெடுக்கமாட்டேன் போர்முனையில் யான் நிற்க
(மாட்டேன்

சண்டையில் பின்வாங்கிப் போகமாட்டேன்—அய்யா சத்தியத்திர்க்கு
(யான் கட்டுப்பட்டேன்

கட்டன் வசனம்—துரைகளே யினிமேல் விழுந்தவாளை யெடுத்துச் சண்டை போடமாட்டேன். சும்மா வந்து பிடித்துக்கொள்ளுங்கள். அல்லது ஓர்கயர் போடுங்கள் கைகால்களெல்லாம் கட்டிக்கொள்கிறேன் வந்து பிடித்துக்கொள்ளுங்கள் துரைகளே!

கண்டாங்கிமேஷர் வசனம்

இதோ பிடித்துக்கொள்ளுங்கள் பட்டாளங்காள். கள்வண்டியில் யேத்தி பாளயம்பட்டி கொண்டு செல்லுவோம்.

கட்டன் துக்கித்தல்—ஹா! குருமலைபன்றி வேட்டை முடிந்தபின் எட்டியாபுரத்துக்கு பால்குடம் கொண்டுபோக, அப்போது மேல் வேஷ்டியுடனும் காலில் செருப்புடனும் வந்து சந்திக்கிறபடியால் அந்த சந்திப்பு ஒப்புக்கொண்டு மரியாதைசெய்ய முடியாதென்றும்.

வேண்டுமானால் அவர்களுடன் சண்டைசெய்து அவர்களை ஜெயித்தால்மாத்திரம் மரியாதை செய்வதாய் தெரிவித்தார்கள். அதன்படி ஆட்டுக்கிடா, சாவல், மல்லர்கள் சகிதம் நீராவிக்குச்சென்று ஜமீனை தோற்கடித்து, பிறகு எட்டியாபுரம் வந்து 60 அடி உயரமுள்ள வழுக்கைமரத்தின் உச்சியில் கட்டியிருந்த பச்சைக்கொடியும் பகடைமார்களால் அருத்து! அதன்பின் ஊமத்துரை அரண்மனை பேய்க்குதிரைமேல் ஏறி சவாரி செய்து, அரண்மனையை 3 சுற்று சுற்றி அகிள் கிடங்கையும் தாண்டி பச்சைக் கொடியுடனும் பேய்க்குதிரையுடனும் பகடைமார்கள் சூழ பாஞ்சால நகரம்வந்து சேர்ந்தோமே.

தம்பி! சுத்தவீரனை உன்னை மல்லப்புரங்காட்டில் வழிதவற விட்டுவிட்டு புதுக்கோட்டையில் மான்ராஜாவின் சூழ்ச்சியால் நான் இக் கும்பினியார் கையிலகப்பட்டு உயிற் துறக்கப்போகின்றேனே அய்யோ தம்பி! உன்னை எப்போது காண்கப்போகிறேன்.

ஷை விருத்தம்

வடநாடு விட்டெந்தன் மூதாதி தென்நாடு
வந்ததர்க் கழுவேனோ
வற்றிடாச் செல்வத்தி லுற்றதோர்—பாதரும்
வான்பதி யடைந்ததர்க்கழுவேனோ
முற்றிலும் யெங்களுட விர்த்தாந்தம் சொல்லியழ
முடியுமோ முடிந்த பாரதம்
குற்றமொன்றில்லாமல் யெங்களை யென்னாளும்
குடிகார்த்த சக்கம்மாளே
முற்றிலும் கார்த்திடா வெட்டவெளி தன்னிலே கை
விட்டகன்றதர்க்கழுவேனோ
மட்டிலா ஜெயவீர ஊமையா பாண்டியன் மல்லப்புரங்காட்டிலே
திட்டமாயெனை விட்டகன்றதர்க்கழுவேனோ தேவியே சக்கம்மா
சற்றேனு மனமிரங்கா மான்ராஜா செய்ததோர்
சதிதனை நினைந்தழுவேனோ
கட்டிபெனை கொண்டேகும் பட்டாளம் கள்வண்டியிலேற்றிய
தர்க்கழுவேனோ

ஷை தரு
பட்டாபிஷேகம் என்ற மெட்டு

பட்டாளம் கையிலே வல்லவன் யான்சிக்கி
கள்வன்போ லானேனே தேவி—சக்கதேவி

ஷ தரு

உள்ளம் நடுங்குதே வல்லவளேயம்மா

படைகள் செய்வினை யம்மா யெந்தன் அம்மா

கல்லோவுன்மனது யென்மேலுருகாது

வல்லவளேயோது அம்மா யெந்தனம்மா

ஷ வசனம்

தாயே இந்த பாளையம்பட்டியில் யென்னைத் தூக்குவதாய்க் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றார்கள். ஆகையால் யென் வரப்பிர சாதப்பிரகாரந்தான் நடக்கவேண்டும். இவர்கள் எத்தனை தூக்கிலேத் தினாலும் யானிறவாதிருக்க அருள்புரிவாய் தேவி.

கண்டாங்கிமேஷர் வசனம்

யேபட்டாளம் இந்த கட்டேபொம்மைத் தூக்கிலேத்திவிடு.

பட்டாளம் வசனம்

சரி அப்படியே செய்கின்றோம். யே கட்டேபாம்பு யிப்பிரிவா யிங்கே நில்லு.

முதல் தூக்கி முரிந்து, ஏழு தூக்கும் முரிகின்றது.

அகிம்சா பாரததர்மம் என்றமெட்டு

கட்டன் தரு

தேவியே சக்கம்மாளே

சிரியனைக் கண்பாரம்மா

பாவியானேனம்மா

பாளையம்பட்டி தூக்கில்

பதருதே ஏ ஏ ஏ தேவி

வசனம்—அம்பிகாயிதோ மறுதூக்கிலேத்திவிட்டார்கள் யெனை பாது கார்க்கவேண்டும் தேவி.

கண்டாங்கிமேஷர் வசனம்

யே பட்டாளம் இந்த கட்டபொம்மை நாம் யேழு தூக்கில் போட்டும் இவன் செத்துப்போகவில்லை. என் செய்வோம். யே கட்ட பாம்பு யேன் உனக்கு தூக்குதில்லை சொல்லு.

கட்டபொம்மு வசனம்

துரைகளே தாங்கள் எத்தனை தூக்கிலேத்தினாலும் யானிறந்து போகமாட்டேன். ஆகையா லெனைத் தொந்தரவு செய்யவேண்டாம்.

யான் குறிப்பிட்ட யிடத்தில் யென்னைக் கொண்டுபோய் தூக்கிலிடுங்கள் துரைகளே

கண்டாங்கிமேஷர் வசனம்

யே கட்டேபாம்பு அது யெங்கே சொல்லு

தன்னன மேட்டு

கட்டன் தரு

கயற்றாறினிலே கட்டப்புலியிலே கட்டப்பொம்மனுயிர் போகு (மென்றே

திட்டமாய்யென்குல சக்கதேவியம்மாள் செப்பின வுரையும் தப்பிடாது

வசனம்—துரைகளே யெங்கள் குலதேவதையாகிய சக்கம்மாளின் சொற்பிரகாரமே நடக்கும். யெனைக்கூட்டிக் கயற்றார் செல்லுங்கள்.

ஓ பட்டாளம் இந்த கள்வண்டியி லேற்றிச் செல்லுங்கள். ஏனென்றால் இந்த தூர்வாடைக்கி அந்தக்கினிமணித் தெய்வம் வராது யே கட்டே பாம்பு வா கயற்றார் போவோம்

கயற்றார் கட்டப் புலியிலே தூக்கு கட்டன்வசனம்

துரைகளே நான் ஓடமாட்டேன் யென்கிட்ட வாராதீர்கள். வந்தால் வீரட்டுவேன்.

கட்டன் தரு

வருகலாமோ என்றமெட்டு

வருகாதேனே தேவியெ யென்முன்—நீ—வருகா
வாலை மனோன்மணியே
வல்லவளே யம்மா (வருகா)

வசனம்—தென்நாடு விட்டு வடநாடு வந்தவளே தேவி சக்கம்மாளே யிந்தவேளை யென்முன் வரவேண்டும் தாயே.

கட்டன்தரு தன்னன மேட்டு

பச்சைக்கிளிபோலே வட்டமிட்டு அய்யா பறந்து வருகின்றாள் சக்க (தேவி

மூங்கிவனச் சோலைவிட்டெழுந்து எந்தன் முன்வந்து தோன்றினாள் (சக்கதேவி

கட்டனெனதுரை கேட்டவுடனம்பாள் கடுகிவந்தாளே கட்டப்புலி

கட்டன்வசனம்—அம்பிகாதாயே மகேஸ்பரி தாம் உத்திரவுபிரகாரமே நடந்து விட்டது. இதோ நீ யெனக்களித்த யேந்திர தகடு விஞ்சை மந்திரம் யாவையும் பெற்றுக்கொள்வாய் தாயே.

ஷிவசனம்

துரைகளே ஓர் சிறிய கத்தியொன்று கொடுங்கள்

துரை வசனம்—ஓபட்டாளம் கட்டேபாம்பு கத்தி கேக்குது தரமாட்டோம் தரமாட்டோம்

கட்டன் வசனம்—துரைகளே சும்மா கொடுங்கள் இந்த கத்தியால் என்ன செய்யமுடியும்

துரைகள் வசனம்—இதோ கத்தி எடுத்துக்கொள்

கட்டன் தரு தன்னன மெட்டு

கையிலே கத்தியை யானெடுத்தேன் கம்பள சக்கம்மாளே நினைத்தேன்
மெய்பதா விருதோள் கிளித்தேன் விஞ்சை மந்திரத்தை விட்டெறிந்(தேன்

கட்டன் வசனம்

அம்பிகா யிதோ நீகொடுத்த மந்திரத்தை ஒப்புக்கொள்.

கட்டன் தரு

பாதமிரண்டையும் தான்கிளித்தேன் பாம்புசக்கரத்தையு மெடுத்தேன்

வசனம்

தேவியிதோ நீகொடுத்த பாம்பு சக்கரத்தையும் ஒப்புக்கொள்.

தரு

நன்ருக யிருதுடை தான் கிளித்தேன் நரிக்கொம்புக ளெடுத் தெறிந்(தேன்

வசனம்—சக்கம்மாளே இந்த நரிக்கொம்புகளையும் ஒப்புக்கொள்.
தேவி யான் கேள்கக்கூடிய வரப்பிரசாதத்தை கொடுக்கவேண்டும்.

கட்டன் தரு

தெட்சண பூமிக்கி குற்றமின்றி திங்கள் மும்மாரி பொழியவேண்டும்
மாதமும்மாரி பொழியவேண்டும் வல்லவளே தாயே சக்கம்மாளே
செல்லபொம்முள்ள நாளையிலே திரும்பி தெட்சணம் வந்தவளே
நாடு செழிக்கணும் சக்கம்மாளே நல்லவிளைவுக ளாகவேணும்
பூமிசெழிக்கணும் வீரமல்லு புஞ்சை விளைவுகள் மிஞ்சவேணும்

கட்டன் வசனம்—தேவி அதுவுமன்றி

கட்டன் தரு

எனக்கிடர்செய்த படுபாவிகள் யென்றென்றும் வாளா விருக்க(வேண்டும்
யென்னைப்போலவ னலையாமல் யேக பராபரி சக்கம்மாளே

...ஜாலி நீசெய்ய வேண்டுமம்மா பாரதியெனப்பேர் கொண்டவளே
கொண்டுபொம்மு பெற்ற மக்களெல்லாம் கோட்டையில் நன்றாக
(வாளவேண்டும்
ஆவியிளந்திட போறேனையோ ஆதரிக்கவேண்டும் சக்கம்மாளே

கட்ட வசனம்—துரைகளே இதோ தூக்குப்போட்டுக்கொள்கிறேன். என்னை இவ்விடத்திலேயே சமாது செய்துவிடுங்கள்.

துரை வசனம்-சரி கட்டபொம்மு அப்படியே தூக்குபோட்டுக்கொள்.

கட்ட வசனம்—ஜெகத்ரக்ஷகியாகிய சக்கம்மாளே எனக்கும் எங்கள் சந்ததிக்கும் யாரார் கெடுதல் செய்தார்களோ அவர்களெல்லாம் என் முன்நிற்க, தேவி இதோ என் கைலேஞ்சின் மூலமாய் உயிர் விட்டு விட்டேன்.

க மேஷர் வசனம்—ஓ பட்டாளம் கட்டபொம்மு செத்துப்போச்சு இந்த பட்டாவாளை எடுத்துக்கொண்டுபோய் ஊமத்துரையிடம் காட்டுவோம். என்னவிதமாய்ச்சொல்லவேண்டும் தெரியுமா? உங்கள் அண்ணுவுக்கு சின்ன நவாப்பு பட்டமும் உனக்கு பெரிய நவாப்புபட்டமும் கொடுக்கும்படி உத்திரவாகியிருக்கிறதென்று தெரிவிப்போம். அவன் ஆசைகொண்டு நாமளுடன் வந்துவிடுவான். வாருங்கள் புறப்படுவோம்.

கண்டாங்கிமேஷர்—தரு

ஊமத்துரையை நாம்பிடிக்க இதோ ஓடுவோம் வாருங்கோ பட்டாளங்
[காள்
கொண்டுபொம்மு மக்கள் ஊமயனை கொண்டுயேவருவோம் நாமளுமே
செல்லுவோம் செல்லுவோம் வாருங்களே அதிசீக்கிரம் யென்னிடம்
[சோல்ஜர்களே.

வசனம்—ஓ பட்டாளம் இந்த துஷ்டனுடன் பிறந்த பெருந்துஷ்டன் ஊமயனைக் கண்டுபிடிப்போம் வாருங்கள்.

ஊமு—தரு கண்ணிவாடி (தன்னன மெட்டு)

அய்யைய்யோ அண்ணுவே என்னசெய்வேன் இப்ப ஆறுமில்லாப்பர
தேசியானேன்
மழையில்லா பயிரானேனெந்தனண்ணு மணமில்லா மலரானேனிங்கின்
[னுள்
ஆலைக்கரும்பானேன் யென்னசெய்வேன் ஆரில்லா வூரானேன் யெங்
[கே உய்வேன்

வேரில்லா மரமானேனம்மா நீரில்லாத கிணருனேனம்மா
மல்லப்புரங்காட்டிலுன்னைவிட்டு வழிமாறிவந்ததற்கென்னசெய்வேன்
யென்றுநான் காண்பது யெந்தனண்ணு பண்டிலே யான்செய்பலனோ
[வின்னுள்.

வசனம்—அண்ணு இச்சண்டாளன் அந்த மல்லப்புரங்காட்டில் தாங்களை விட்டுப்பிரிந்தபோது என் ஊக்கமும் குறைந்துபோய்விட்டதே. ஆஹா! எங்கு காண்கப்போகின்றேன். ஒகோ இதென்ன பட்டாளங்கள் சூழ்ந்து வருகின்றது.

கண்டாங்கி வசனம்—ஓ ஊமத்துரை பயம்வேண்டாம். உன் அண்ணுவுக்கு சின்ன நவாப்பு பட்டமும், உனக்கு பெரிய நவாப்பு பட்டமும் கொடுக்கும்படி உத்திரவாகியிருக்கிறது நீ வா.

ஊம—தரு

என்னை மோசம்செய்யவே நினைத்து யேகிவந்தீர்களோ பட்டாளங்காள்
மன்னன் ஊமயனை மோசம்செய்ய மதித்து வந்தீரோ பட்டாளங்காள்
கிட்டிவராதீர்கள் வெரட்டிடுவேன் யெட்டிநடவுங்கள் பட்டாளங்காள்
சீமைக்கு நீங்கள் திரும்பமாட்டீர் சிறுவன் ஊமைக்கு கோபம்வந்தால்
நாட்டுக்கு நீங்கள் திரும்பமாட்டீர் நான் சினங்கொண்டாலோ பட்டா
(ளங்காள்.

வசனம்—துரைகளே என்னை மோசம் செய்வதற்கு வந்திருக்கின்றீர்கள் எனக்கு நன்றாய்த்தெரிகிறது. ஆகையால் சென்றுவிடுங்கள் நான் உங்களுடன் வரமுடியாது.

கண்டாங்கி மேஷர் வசனம்—ஏ ஊமத்துரை அந்தமாதிரி இல்லை இல்லை. இதோபார் உன் அண்ணன் கை பட்டாவாள் கொடுத்தனுப்பிவிட்டார் பாரும் ஊமத்துரை.

ஊம—தரு

கண்டேநானந்த மிகவேகொண்டேன் கட்டளகனண்ணன் கைவாளதை
மெத்த மகிழ்வு நான் கொண்டேனைய்யா உத்தமன் கைவாளைக்கண்ட
(போதே
நல்லது நல்லது நானும் வாறேன் நடப்போம் நாமளும் ஒன்றுபோலே

வசனம்—துரைகளே இப்போதுதான் எனக்கு சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது புரப்படுவோம்.

க மே வசனம்—ஓ பட்டாளம் இவனுக்குத்தெரியாமல் பிடித்துக்கட்டி பாளையங்கோட்டை ஜெயிலில் கொண்டுபோய் அடைத்துவிடுவோம்.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலக

# கட்டபொம்மு துரை

கருப்பையா வசனம்—சுப்பையயா ஒரு தெம்மாங்கு சொல்லுடா.

சுப்பையா—தரு (தெம்மாங்கு பாட்டு.)

மண்ணை நம்பி மரமிருக்க—மரத்தைநம்பி யிலையிருக்க
உன்னைநம்பி யானிருக்க—உலகம் பொருக்கலையோ—தில்லேலேலே
(லோ தன்னு

சுப்பைய்யா வசனம்—அடே கருப்பையா நீ ஒரு பாட்டுச்சொல்லுடா நல்லாயிருக்கனுன்டா.

கருப்பையா பாட்டு.

கண்டியிலே காப்பித்தண்ணி—கடலைச்சுத்தி உப்புத்தண்ணி
மதுரையிலே பம்புத்தண்ணி-மாராட்டம் கொள்ளுதடி—தில்லேலேலே

சுப்பைய்யா பாட்டு.

போன வெள்ளிக்கிழமை—பொல்லாத பட்டாளங்கள்
காணுமலிந்தவழி—கட்டபொம்மைக்கொண்டுபோனர்--தில்லேலேலே

சுப்பைய்யா வசனம்—கருப்பையா நீ பாத்தியடா போன வெள்ளிக் கிழமை பாஞ்சாலங்குரிச்சி கட்டப்பொம்மை பிடித்துக்கொண்டுபோ னார்கள்.

கருப்பையா பாட்டு.

இந்தவெள்ளிக்கிழமை தந்திரமாய் பட்டாளங்கள்
வந்து ஊமத்துரையை வாகுடனே கொண்டுபோருர் என் தங்கரத்தி
[னமே பொன்னே பொடிமட்டை.

ஊம வசனம்—ஆஹா ஆடுமாடு மேய்க்கும் பிள்ளைகள் என்னமோ பாட்டுபாடுகிருர்கள் கவனிப்போம்.

ஏ பிள்ளைகளா நீங்கள் பாடின பாட்டு என்ன?

பிள்ளைகள் வசனம்—ஐயா ஒன்றுமில்லை; போன வெள்ளிக்கிழமை கட்டபொம்மை பிடித்துக்கொண்டு போனர்கள். இந்த வெள்ளிக்கிழ மை தாங்களைப் பிடித்துக்கொண்டு போகிருர்களென்று பாடுகிரோம்.

ஊம வசனம்—அப்பா பிள்ளைகளா வாஸ்த்துவம்தானு?

பிள்ளைகள் வசனம்—ஆம் வாஸ்த்துவம்தான். நாங்கள் எதற்காக பொய் சொல்லனும். பத்து நூறு கொடுத்திரப்போரியோ போப்பா போ.

ஊம வசனம்—படைகளே நீங்கள் இவ்விதம் செய்வீர்களென்றிருந் தால் நான் என்ன செய்வேன் தெரியுமா.

ஊத—தரு

சக்கை சக்கையாய் பிளந்தெரிவேன் சமர்த்தன் ஊமையபாண்டியனும்
துண்டுதுண்டாகவே வெட்டிடுவேன் சோல்ஜரை யொக்கமயக்கிடு
[வேன்
ஆனாலிருக்கட்டு ஊமையா பாண்டியன் அரிவேனிந்திர ஜாலமெல்லாம்
ஊம வசனம்—துரைகளே உங்களிஷ்டம்போல் செய்யுங்கள்.
கூமே வசனம்—ஓ பட்டாளம்! இந்த பாளையங்கோட்டை ஜெயிலில் அடைத்து விடுங்கள்.

யே ஊமத்துரை நீ ஜெயிலில் சாப்பாடு சாப்பிடுகிறாயா? அல்லது வீட்டுச் சாப்பாடு சாப்பிடுகிறாயா? சொல்லு.
ஊம் வசனம்—துரைகளே! ஓட்டரம்பட்டி சந்தனக்கோனாரை வரும்படி செய்யுங்கள். நான் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன்.
சந்தன வசனம்—ஊமத்துரை பாண்டியா வந்தனம். ஹா! தெய்வமே உங்களுக்கு இவ்வித கஷ்டமா வரவேண்டும்.
ஊம வசனம்—சந்தனக்கோனாரே இதெல்லாம் நாம் செய்த தவப் பயனே பயன். இதர்க்காக நாம் வருந்துவதில் என்ன பயனிருக்கிறது. இனி நடக்கவேண்டிய விஷயங்களை தெரிவிக்கின்றேன்.

ஊமே பாட்டு.

படைகள் சாதம் நானுண்ண மாட்டேன்
வீட்டுச்சாதம் நீரும் கொண்டு வாரும்
ஜெயிலினில் சாதம் நான் உண்ணமாட்டேன்
சந்தனக்கோனாரே சென்று வாரும்

ஊம வசனம்—சந்தனக் கோனாரே சென்று வாரும். எனக்குக் காலா காலத்தில் சாதம் கொண்டுவந்து கொடுக்க வேண்டியது.
சந் வசனம்—அப்படியே கொண்டு வருகின்றேன்.

ஜெயிலில் ஊமை புலம்பல்.

என்ன குறைவுகள் செய்தோமம்மா இருவரை யிவ்விதம் செய்தா
[யம்மா
சும்பனே சும்பனைத் தான் வதைத்தாய் தோக்கலவார் குலத்தையுங்
[கார்த்தாய்
ரக்தாசுறந்தா வீரமல்லு ராஜ்ய சமங்கார சக்கம்மாளே

...லயாளம் வாழ்ந்தவளே வெள்ளையன் பெட்டியில் வந்தவளே
யேலமலையாளம் வாழ்ந்தவளே யேக பராபரி சக்கம்மாளே
ஊம வசனம்— தாயே சக்கம்மாளே இவ்வித கஷ்டங்களுக்குள் ஆளாக்கி வைத்தனையம்மா சரி. சந்தனக்கோனர் வந்திடுவார். வந்த பின் யோசிப்போம்.
சந் வசனம்—மகாராஜா! ஊம் பாண்டி! இதோ சாதம் கொண்டுவந்து விட்டேன். சாப்பிடுங்கள்.
ஊம வசனம்—சரி சந்தனக் கோனரே.

ஊம—தரு

ஆபத்துக் காலத்தில் வந்து சேர்ந்தாய் ஆயர் குலத்தி லுதித்தவரே
கையிற்குதவியாய் வந்து சேர்ந்தாய் கார்முகில்வண்ணன் குலத்தவரே
வல்லவளேயம்மா சக்கம்மாளே வந்து உதவம்மா யிந்தவேளை
ஊம வசனம்—சந்தனக்கோனரே சாதம் சாப்பிட்டு விட்டேன். நீ நாளையதினம் சாதம் கொண்டுவரும்போது ஓர் எழுத்தாணியும் ஓலையும் ஒன்றும்தெரியாமல் கொண்டுவந்து சேரவேண்டியது. சென்றுவாருங் கள். என்னை வெள்ளிக்கிழமைய தினம் இந்தப் பாளையங்கோட்டை யில் தூக்குபோடுவதாக சொல்லி இருக்கின்றார்கள்.
சந் வசனம்—சிவத்தையா பாண்டியா சென்று வருகின்றேன்.

மருநாள் சந்தனக்கோனர் சோறுகொண்டு போகுதல்—தரு

சோறுகொண்டுபோறேன் பாளையங்கோட்டைக்கு சுந்தரபாண்டியனு (ண்டிடவே
சாதம்கொண்டுபோறேனூமத்துரைக்கு நான் சந்தனக்கோனருமிந்த [வேளை.
சந்தன கோ வசனம்—மகாராஜா இதோ சாதம் கொண்டுவந்துவிட் டேன் சாப்பிடுங்கள்.
ஊம வசனம் சந்தனக்கோனரே நான் சொன்ன சாமான்கள் வந்தி ருக்கின்றதா?
சந்தன வசனம்—எல்லாம் வந்திருக்கின்றது சாப்பிடுங்கள் பின்னுடிச் சொல்லுகின்றேன்.
ஷை வசனம்—மகாராஜா இதோ தாங்கள் சொன்ன ஓலையும் யெழுத் தாணியும் கொண்டுவந்திருக்கின்றேன் ஒப்புக்கொள்ளுங்கள்.
ஊம வசனம்—சந்தனக்கோனரே நமது படைத்தலைவனுகிய ஆபிரம்

கம்பளம் நூறுபரிவாரம் யாவருக்கும் எழுதிவிட்டேன். இதைக்கொ
ண்டுபோய் தானுவதியிடம் கொடுத்து சிலரை விறகு கட்டும், சிலரை
புல்லுக்கட்டுமாய் கட்டுக்குள் ஆயிதங்களைக்கொண்டுவரும்படி செய்
யுங்கள். விலை கேட்டால் 40, 50 ரூபாய் என்று சொல்லும்படி செய்
யுங்கள். ஒருவரும் வாங்கமாட்டார்கள். பிறகு நாம் தப்பிக்க வழி
தேடுவோம் சென்றுவாருங்கள்.

தானுவதி வசனம்—ஆஹா எங்கள் ஊமத்துரை பாண்டியன் எங்கிருக்
கின்றுரோ தெரியவில்லையே என் செய்வேன் சரி இருக்கட்டும்.

சந்தன வசனம்—அய்யா தானுவதி பிள்ளை இதோ சிவத்தையா பாண்
டியன் ஓலையொன்று கொடுத்தனுப்பினுர்.

தானுவதி—தரு கடிதம் வாசிக்கின்றுர்.

முல்லபட்டிவாழ் முத்தப்பநாயக்கரும் முன்னூறுபேருக்குகைகாரரும்
குளத்தூரில் வாழும் சுப்பையாநாயக்கராம் கொள்ளையிலே மகா வல்ல
(பரும்

நாகலாதபுரம் இரவாப்பு பான்டியன் நானூறு பேருக்கு கைகாரனும்
கோலாபட்டி கலங்காதகண்டப்பன் குத்துவெட்டுகளில் கெட்டிக்காரன்
காலலகுடி சிறுமல்லு பாண்டியா கத்திசண்டையிலே சுத்தவீரர்
தட்டப்பாரைவாழும் கொட்டாரப்புளியென்ற தட்டாரப் பையனும்
(கெட்டிக்காரன்

குதிரை காலிலே நுழைந்து வெட்டுவான் கோடிஜனங்களுமானுலுமே
சின்னதுரைக்கி அடப்பவேலைசெய்யும் சிறந்தவெற்றிவேலோடிவாடா
கோடாங்கி பட்டிவாழ் கம்பளம் வாருங்கள் குருவாருபட்டி கம்பளம்
[சேருங்கள்

வாதாலக்கரைவாழ் வாடாசூடாமணி வல்லபச்சண்டையில் கெட்டிக்
[காரர்

சகலருமொன்றுபோல் சேர்ந்துமே வாருங்கள் ஜல்தியில் பட்டாளம்
(சண்டை செய்ய

கட்டபொம்மு ஊமத்துரையவர்களும் கருதி எழுதும் ஓலையிது.

கம்பளங்கள்—தரு

புல்கட்டு விறகுகொண்டுமல்லோ புறப்பட்டோம் நாங்கள் கம்பளங்கள்
வேல்ப்பட்டா வாளதைவுள்ளேவைத்து வெளிப்பட்டோம் நாங்கள்
[கம்பளங்கள்.

...ரைகள் வசனம்—ஏ புல் என்ன விலை: குதிரை தின்னுமா நல்லபுல் தானு?

கம்பள வசனம்—துரைகளே இந்தப் புல்லை சண்டைக்குதிரைக்குத் தான் ஆகும் கிரையம் பத்து ரூபாய்.

முத்தப்ப நாயக்கர்—தரு

லேகியம் வாங்கலையோ—துரைகளே—லேகியம்
சாமிமாரே லேகியம் வாங்கலையோ
அய்யாமாரே லேகியம் வாங்கலையோ.

அநுபல்லவி

மிக்க நூல்முறைகள் பார்த்து
மேலான லாகிரிகள் சேர்த்து
பக்குவத்துடனமைத்து
பற்பல ஊர்களில் விற்பனைசெய்ததோர் (லேகியம்)
யெதிரிகளைப்பிடிக்கும்
யென்றென்றும் உயிர்மடிக்குச்
பருதிபோய் ஒடுங்கு முன்னே
பாடையிலே சுடுகாடுகள் போக்கிடும் (லேகியம்)
கைகால் இடுப்புவலி
கண்ணெரிவு காந்தல் ஜுரம்
வையத்திலுண்டாபேருக்கு
வரும் பிணிக்கொரு மருந்து மருந்து (லேகியம்)
விகடநாடகமருந்து
வெள்ளையர்க்காகவே தந்து
சகடுபோலவே சாய்க்கும்
தக்கதோர் முத்தப்பநாயக்கரின் கைத்திர (லேகியம்)

துரைகள் வசனம்—அரேபாய் இது என்ன இது?

முத்தப்ப நாயக்கர் வசனம்—துரைகளே இது சுகாதார முறைப்படி சேர்த்த லேகியம் இதன் பெயர் முத்தப்ப நாயக்கர் லேகியமென்று பெபர். இதன் குணம் எதிரிகளை ஜெயிக்கலாம் கைகால்வலி இடுப்பு வலி இவைகளையெல்லாம் நீக்கும். போதையும் ஜாஸ்தி இராது சாப்பிட ருசிகரமாயிருக்கும்.

துரை வசனம்—கொஞ்சம் கொடு பார்ப்போம். ஓ நல்லாயிருக்கு பட்டாளத்துக்கு குடு நான் ரூபாய் தருகிறேன்.

முத்தப்ப வசனம்—துரைகளே இதோ கொடுத்துவிட்டேன்.
சம் கொஞ்சம் தண்ணீர் குடுங்கள். என் லேகியம் குணம் என்ன தெரியுமா?

முத்தப்பன் பாட்டு.

கந்தபிள்ளை மாத்திரை—கையிலாச யாத்திரை
நல்ல நல்ல மாத்திரை—யாங்கள் செய்ததே துரை.
சின்னுபிள்ளை மாத்திரை—சிவலோக யாத்திரை
மன்னன் முத்தன் யாத்திரை—வைகுண்ட யாத்திரை.

ஷை வசனம்—துரைகளே இந்த மாத்திரையானது நல்ல கைதேர்ச்சியடைந்தவர்களைக்கொண்டு செய்தது. இதை சாப்பிட்டால் எல்லா காரியமும் சித்தியாகும்.

துரை வசனம்—ஓ இதையும் நாமள் பட்டாளத்திற்கு கொடு.

முத்த வசனம்—இந்த பட்டாளங்களுக்கு லேகியமும் மாத்திரையும் கொடுத்துவிட்டேன், இன்னும் ஓர் விநாடியில் சகலரும் மயங்கிபோய் விடுவார்கள், இதோ நான் சென்று வருகின்றேன்.

குடுகுடுப்பைக்காரன் (கந்தாகுகா மேட்டு.

காளி கபாலி மகா சூலி மகேஸ்பரி—கருணை செய்ய ஓடி வா
யெனம்மா கருணை செய்ய ஓடி வா (காளி)
ஆலிற்றுயின்றதோர் மாலின் சகோதரி — வாலை மனோன்மணியே
[யெனம்மா
வாலை மனோன்மணியே (காளி)
மேலமலையாளம் வாழும் பராபரி பாலன் முன்னேடிவா வா
யெனம்மா—பாலன் முன்னேடிவா வா (காளி)
காலை மாலை சதாவேளை யெல்லாம்துதி கப்பள முன்னேடிவா சக்கம்மா
கம்பள முன்னேடிவா (காளி)

வசனம்—சாடி சொல்லாதே பொய் சொல்லாதே தூ—தூ காட்டேரி மூளி—முண்டே மூளிமுண்டே ஓடிவா ஓடி.

க மே வசனம்—ஓ யட்டாளம் இதுஎன்ன குடுகுடு யென்று அடிக்குது

குடுகுடுப்பை வசனம்—துரைகளே குரி சொல்லுவேன்.

குடுகுடுப்பை வசனம்—துரைகளே என் தேவதை சொல்லுது யாரோ ஒருவன் லேகியமும் மாத்திரையும் கொண்டுவந்து கொடுத்தானும் அதினல் பாதி பட்டாளம் மயங்கி விட்டதாம் வாஸ்த்துவம்தானு துரைகளே?

... வசனம்—ஆமாம் ஆமாம் இன்னும் சொல்லு பார்ப்போம்.

குடுகுடு வசனம்—அதுபோக செத்துப்போன படைகளை யெல்லாம் சாகாமல் இருக்கும் படைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைத் தூக்கிச் கொண்டுபோய்விடவேண்டுமாம். இல்லாவிட்டால் படைகள் காற்று அடித்து இன்னுமிருக்கப்பட்ட படைகளும் இறந்துபோய்விடுவார்களென்று என் தெய்வம் சொல்லுகிறது. ஆகையால் படைகளை தூக்கிக்கொண்டு போய்விடுங்கள். நான் சென்றுவாரேன்.

ஊமத்துரை பாட்டு (தன்னன மெட்டு.)

ஜெயிலுடைத்திட கிருபைசெய்யம்மா சக்கம்மாளேதாயே பெற்றவளே
கோட்டையுடைத்துமே சிவந்தையா பாண்டியன் கொற்றவன் நான்
(போரேன் பாஞ்சைநகர்
பக்கத்துணையாக வேணுமம்மாதாயே பாதுகார்க்கவேணும் சக்கதேவி
கூடத்துணையாக வேணுமம்மா நல்ல கோலநவமணி பூண்டவளே
பட்டாளமிதோ நான் வெரட்டுகிறேன் பாதுகார்கவேணும் வீரமல்லு

வசனம்—தாயே உன்னுடைய கிருபையால் பட்டாளமெல்லாம் வெரட்டி விட்டேன். இதோ பாஞ்சாலங்குரிச்சி நாடிச்செல்லுகின்றேன். கம்பளங்காள் வாருங்கள்.

(துரை வருகிறான் அக்கினி சன்னல் வருகின்றான்.)

அக்கினிசன்னல் யான் ஓடிவாறேன் அடங்கா ஊமையனைப்பிடிக்க
இக்கணம் தெக்ஷண பூமிநாடி இதோ படைகள் கொண்டுபோறேன்
மட்டிலடங்கா ஊமையனை மன்னர்கள் நாமே பிடித்துச்செல்வோம்.

அ துரை வசனம்—படைகாள் வாருங்கள். அந்தக் கட்டபொம்மு செத்துபோச்சு. ஊமத்துரையை பிடித்துவருவோம் வாருங்கள் செல்லுவோம்.

தானாவதி காட்டில் வருந்துகிறார் (தன்னன மெட்டு.

ஒட்டப்பிடாரம்வாள் பிள்ளைமகன் காட்டிலலைந்து வருந்துகின்றேன்
கோட்டைக்கதிகாரமன்னர்களை இப்போ கொற்றவரைவிட்டுப் பிரிந்து
[விட்டேன்
நாட்டுக்கதிகார மன்னர்களை நான்பிரிந்து யினியென்ன செய்வேன்
ஒட்டமாய் ஓடிரேனிந்தவேளை உத்தமரைக்காண பிள்ளைமகன்.

படைகள்—தரு

ஊமத்துரை தன்னை நாம் பிடிக்க ஓடியே வாருங்கள் சோல்ஜர்களே
வம்பனை நாமே பிடித்துவர வாருங்கள் பட்டாளம் ஒன்றுபோலே.

அக்கினி வசனம்—ஓ பட்டாளங்காள் இந்தா நிற்கின்ற...
பிள்ளை அவனைப்பிடியுங்கள்.
பட்டாள்ளங்கள் வசனம்—துரைகளே இதோ பிடித்துவிட்டோம்.
அக்கினி வசனம்—ஏ நீதானு கட்டபொம்மன் ஊமைத்துரையைப் பிடித்து தருகிறேனென்று பொய்சொன்னவன். ஏ பட்டாளங்காள் இவனை இந்த நாகலாதபுரம் வேப்பமரத்தில் தூக்கிவிடுங்கள்.

தானுவதி வருந்துதல் (தன்னன மெட்டு.)

ஆதி மனோன்மணி அம்பிகையே ஆயிரங்கம்பளம் ஆண்டவளே
பாதிமதியை யணிந்தவளே தாயே அரன்பாங்கொண்ட சக்கம்மாளே
வாலைமனோன்மணி அம்பிகையே தாயே வந்துவுதவம்மா வீரசக்கு
ஆவிகல்ல இழக்கப்போறேன் ஆதரியம்மா நீ சக்கம்மாளே
ஆறுமற்றபாவியானேனம்மா ஆதரிக்கவேண்டும் சக்கம்மாளே

வசனம்—துரைகளே ஐயோ நான் ஒன்றும் செய்யவில்லையே சரி தூக்கிவிடுங்கள்.
அக்கினி வசனம்—ஏ ஏ போ மேன் தூக்கு தூக்கு.

தானுவதி இறந்துவிட்டார்.

அக்கினி புறப்பட்டார்கள்.

ஓ பட்டாளங்காள் தானுவதிபிள்ளை இந்த நாகலாதபுரம் வேப்பமரத்தில் செத்துபோச்சு. வாருங்கள் தற்சமயம் எல்லாமொடிங்கிவிட்டது நாம் நம் சென்னைக்கி புறப்படுங்கோ பட்டாளம்.
வெள்ளையம்மாள் வசனம்—அப்பா சிவத்தையா பாண்டியா சகலரும் க்ஷேமத்துடன் வந்து சேர்ந்தீர்களா வாருங்கள் வாருங்கள் அப்பா ஊமத்துரை அண்ணு கட்டபொம்மு துரையும் தானுவதி பிள்ளையையும் காணேமே எங்கேயப்பா?
ஊம வசனம்—அக்காள் வெள்ளையம்மாள் இதோ தெரிவிக்கின்றேன் கேளுங்கள்.

நொண்டிச்சிந்து.

சீர்மிகும் பாஞ்சை நகராளுமணியே யானிதோ செப்பிடும் மொழிகளில் தப்பிதமில்லையென யொப்பிடுவாயம்மா கார்மிகு மல்லப்புரமந்தக் காட்டினிலே நாங்கள் கண்டனமாய் வனம் சென்றிடவே பரியொன்று சுனங்கிடவே மாருபாடாய் வழிதிசை தப்பியான் வந்தேன் யென்றும் மட்டிலடங்காத துட்டர்களின் காலன் கட்டனையுமிளந்தேன் பெட்டியடிவாழ் தானுவதிபிள்ளை வெளிபொட்டலிலே யெனைவிட்டகன்றிட

...ாயன கொடுமை உற்றேன் பாளையக்கோட்டைதனை நாடி
நாமள் உறவினர் சகலரின் திரமதாலிங்கு நான் விரைவுடனே வந்
தேன். (சீர்)

ஊம வசனம்—அக்காள் இன்னும் விபரமாய்ச்சொல்லவென்றால் இய
லாது. ஆகையால் சுருக்கமாய் சொல்லியிருக்கிறேன் அக்காள்.

வெ வசனம்—தம்பி சுந்தர பாண்டியா கட்டனை இழந்தேனென்று
சொன்னாயே அது என்னப்பா தம்பி?

ஊம வசனம்—ஆம் அக்கா அண்ணா கட்டபொம்முதுரையை கயற்று
ற்றிலே தூக்கிவிட்டதாக மாடுமேய்க்கும் பிள்ளைகள் சொல்லக்கேள்வி
அதுவுமன்றி இந்த வெள்ளையர்கள் அண்ணா கைபட்டாவையும் கொ
ண்டுவந்து காண்பித்தார்கள். அதுதான் எனக்குத்தெரியும்.

வெ வசனம்—அப்பா சுந்தரபாண்டியா இவ்விதம் நடந்துவிட்டதா.

ஆ என் அருமைக் கண்மணியே என்ற மெட்டு.

ஆ யென்னருமைப் பாண்டியனே
யென்னுவி பதருதப்பா யென் பாண்டியா
பாவியானேனடா பட்டத்தரசனே
கூவியே நாமழக் கொண்டுமொம்மு பெற்றார் (ஆ)

வசனம்—அண்ணா கட்டபொம்மு துரை தாங்கள்

ஷை பாட்டு

பாஞ்சாலி நாடாள வந்து
பட்டாளத்தின் கையில் கட்டுப்பட்டு நீ
கட்டழகா நீ கயற்றுற்றினில் மாண்டிட (ஆ)

வசனம்—அண்ணா தாங்கள் இந்த பாஞ்சை நாட்டை ஆழ்வீர்களென
எவ்வளவோ சந்தோஷகரமாக இருந்தோமே இப்போது இந்தச் சண்
டாளப் படைகள் கையாலேயா உயிர் இளக்கவேண்டும்.

வெ—தரு

பாஞ்சாலங்குரிச்சி பட்டம் ஆழவந்த கட்டபொம்முதுரையென்றிருந்
[தோம்
வெட்டவெழியில் கைவிட்டதாலே வயர்பற்றியெரியுதே யெந்தனண்ணா
மட்டுக்கடங்காத வீரதீரசூர கட்டபொம்முதுரை காளையென்றால்
துஷ்டரும் எட்டிநடந்திடுவார் பொல்லாத தோக்கலவார் குலமென்று
இப்படி ஞாயமிருக்குதே பூமியில் யெப்படி உம்மைப்பிடித்தாரண்ணா
மாண்டீரோ மாண்டீரோ யெந்தனண்ணா மண்டலத்தோர்களிணுசை
[விட்டு

வசனம்—அண்ணா இந்தவிதம் தாங்கள் சென்று மடிவீர்கமெ... தெரிந்திலேனே.

ஊம வசனம்-அக்கா ஏன் வருந்துகிறீர்கள் நாம் வருந்துவதில் என்ன பிரயோஜனம் நடந்த காரியம் நடந்துவிட்டது இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பாருங்கள்.

வெ வசனம்—தம்பி அதுதான் சரி உனக்கு தூத்துக்குடி முத்தையா பாண்டி தங்கையை கல்யாணம் செய்யவேண்டியதிருக்கிறது. ஆகை யால் கும்பினியார்கள் கோட்டைகளை உடைத்துவிட்டார்கள். தற்சம யம் மண் கோட்டை ஒன்று கட்டிமுடி.

ஊமத்துரை கோட்டையை கட்டி முடிக்கிறான்

ஊம வசனம்— அக்காள் கோட்டை முடிந்துவிட்டது.

வெ வசனம்—தம்பி ஊமைபாண்டியா மிகுந்த சந்தோஷம்.

ஷெ வசனம்—அடே சேவகா தூத்துக்குடி முத்தையா பாண்டியனை அழைத்துக்கொண்டுவா.

முத்தையா பாண்டியன் வசனம்—வெள்ளையம்மாள் எனக்கு ஓலை யனுப்பிய காரணமென்ன?

வெ வசனம்—ஆமா அனுப்பினேன். அத்தான் தாங்கள் தங்கையை என் தம்பியாகிய ஊமத்துரை பாண்டியனுக்கு விவாஹம் செய்து கொடுக்கவேண்டியது. என்ன தெரிவிக்கின்றீர்கள்?

முத்தையா வசனம்—வெள்ளையம்மாள் அதற்கென்ன சந்தேகம் அப் படியே செய்வோம். நாம் ஜாதிமுறைப்படி பருஷம் வகையறுக்களைப் போட்டு செய்துகொள்ளு.

வெ வசனம்—சரி அப்படியே செய்துகொள்வோம் பெண்ணை அழைத் துக்கொண்டு வாருங்கள்.

முத்தையா வசனம்— இதோ அழைத்துக்கொண்டு வருகின்றேன்.

ஷெ வசனம்—வெள்ளையம்மாள் கல்யாண விஷயத்தை நடத்துவோம்.

வெ வசனம்—சரி அப்படியே நடத்திவிடுங்கள்.

முஹூர்த்தம் நடக்கின்றது.

முத்தையா வசனம்—வெள்ளையம்மாள் நான் சென்றுவருகின்றேன்.

வெ வசனம் சுகக்ஷேமமாய் சென்றுவாருங்கள். சுபம்! சுபம்!! சுபம்!!!

பொது வசனம்—நமது சருணை கிருபையுள்ள செவர்ன்மெண்டாரவர் கள் கட்டபொம்முதுரையைக் கயற்றூரில் தூக்கிவிட்டு ஊமத்துரையை

...விட்டு இனியாவது கிஸ்திப் பணங்களை செலுத்துவார்களென்று ஏழு வருடகாலமாய் விடுநாள் கொடுத்தும் ஷை கிஸ்திப்பணம் வராமையால் பின்னும் பாஞ்சாலங்குரிச்சிக்குப் படையெடுத்து சென்றார்கள்.

வண்ணாத்தி வருகிறாள்—தரு (செல்லூரு குடியிருக்கிறது என்றமெட்டு.)

கொண்டுபொம்மு கோட்டை வண்ணாத்தி என் சாமிகாள்—நான்
குடியிருப்பு பாஞ்சாலங்குரிச்சி—தில்லேலேலோ

சோறு போடுங்க நாச்சியாமாரே
துரைக்குப்போக நேரமாச்சு
கஞ்சிவூத்துங்க ஆத்தாமாரே
கழுதைபத்த நேரமாச்சு (கொண்டு)
அழுக்குப் போடுங்க அய்யாமாரே
வெழுக்கப்போக நேரமாச்சு
வழுக்கப்பாறை போகாவிட்டால்
வெழுப்பானெந்தன் வீட்டுக்காரன் (கொண்டு)
நேரம் உச்சிப்பொழுதுமாச்சு
நேற்றுக்கிடைத்த கஞ்சிபோச்சு
ஆற்றைநாடிப் போகவேண்டும்
போட்ட வேஷ்டி வெழுக்கவேண்டும் (கொண்டு)

வண்ணாத்தி வசனம்—என்னங்க அய்யாமாரே எனக்கொரு பயவந்து வாச்சிருக்கான்.! ஒருவழியா ஒவக்களிச்ச பய இந்த தூமையக்குடிக்கி மகன் தூமயக்குடிக்கியைக் கட்டின நாள்முதலாய் நானே கிடந்துதான் உழைக்கிறேன்.

புருஷனும் பெண்ஜாதியும் வெழுக்கிறார்கள். வண்ணாத்தி—தரு

ஆனைமேலே யென்சாமி அழுக்கெடுக்கும் சோவிவி—நான்
ஆண்டிவண்ணான் யென்சாமி பேத்தியல்லோ (சோவிவி)
குதிரைமேலே யென்சாமி அழுக்கெடுக்கும் சோவிவி—நான்
குமாரவண்ணான் யென்சாமி பேத்தியல்லோ (சோவிவி)
கழுதைமேலே யென்சாமி அழுக்கெடுக்கும் சோவிவி—நான்
கருப்பவண்ணான் யென்சாமி பேத்தியல்லோ (சோவிவி)

வண்ணாத்தி வசனம்—ஏ குமாரவண்ணான் போரா சரி வெள்ளையெல்லாம் வெழுத்தாச்சு வா. நாம் கழுமலைத்திருவிளாவுக்குப்போவோம்வா.

வண்ணான் வசனம் ஆமளா போகத்தான் வேணு

வண்ணாத்தி — தரு

கழுமலே பேகலாம்வா
யென் அத்தைபெற்ற முத்தே
தாய் அம்மான் பெற்ற கண்ணே
பாலக்காட்டுத் துரையே
பல் வருசைக்காரா
மெல்ல மெல்ல வந்திருங்க திருநாளுக்கு.

வண்ணான் — தரு

காதுகளிலும் கடுக்கனில்லையே
யே—கழுதைப்பயபிள்ளை
யே—மூளிப்பயபிள்ளை
யே—நாரப்பயபிள்ளை
நான் வல்லே திருநாளுக்கு

வண்ணாத்தி வசனம்— இந்தா யே அப்படி இப்படி பேசிக்கிட்டுத் திரி யாதே நீ சீரளிஞ்சு போவே.

ஷெயாள் — தரு

காதுக்கேற்ற கடுக்கன் தாரேன் வா
யென் அத்தைபெற்ற முத்தே
தாய் அம்மான்பெற்ற கண்ணே
பாலக்காட்டுத் துரையே நல்
பல் வரிசைக்காரா
மெல்ல மெல்ல வந்திருங்க திருநாளுக்கு

வண்ணான் — தரு

கையிலரக்காசுமில்லையே
யே—கழுதைப்பயபிள்ளை
யே—மூளிப்பயபிள்ளை
யே—நாரப்பயபிள்ளை

வண்ணாத்தி—தரு

கையில் ரொக்க காசு நான் தாரேன்
யென் அத்தைபெற்ற முத்தே
தாய் அம்மான் பெற்ற கண்ணே நல்
பாலக்காட்டுத்துரையே
பல் வருசைக்காரா
மெல்ல மெல்ல வந்திருங்க திருநாளுக்கு

வண்ணான்—தரு

இடையில்கட்ட வேஷ்டியில்லையே
யே—கழுதைப்பயபிள்ளை
யே—மூளிப்பயபிள்ளை
யே—நாரப்பயபிள்ளை
நான் வல்லே திருநாளுக்கு

வண்ணாத்தி—தரு

கெண்டைபோட்ட சோமன் நான்தாரேன்.
யென் அத்தைபெற்ற முத்தே
தாய் அம்மான் பெற்றகண்ணே நம்
பாலக்காட்டுத் துரையே
பல் வருசைக்காரா
மெல்ல மெல்ல வந்திருங்க திருநாளுக்கு

வண்ணான்—தரு

காலுக்கிட மிஞ்சியில்லேயே
யே—கழுதைப்பயபிள்ளை
யே—சண்டிப்பயபிள்ளை
யே—சவுங்கப்பபபிள்ளை
நான் வல்லே திருநாளுக்கு

வண்ணாத்தி—தரு

காலுமிஞ்சி வாங்கித்தாரேன் வா
யென் அத்தைபெற்ற முத்தே
தாய் அம்மான் பெற்ற கண்ணே
பாலக்காட்டுத் துரையே
பல் வரிசைக்காரா
மெல்ல மெல்ல வந்திருங்க திருநாளுக்கு

**வண்ணான்** வசனம்—யேவில்லா என்ன கேளியா பேசிக்கிட்டுத்திர்ரே என்னலா தெரியாதாக்கும் உங்க அப்பே கொடுத்த சீறு வரிசைகள் ஒரு ஓட்டை சட்டியும், ஒரு நொண்டிக் கழுதையும் பத்திக்கிட்டு வந்தே இதைத்தான் அடிக்கொருதரம் சொல்லிக்கிர்ரே.

வண்ணாத்தி வசனம்—யே இந்தா உங்க அப்பன் பொளச்ச பொளப்பு தெரியாதாக்கும் நான் அங்கேயிருந்து வரும்போது ஒரு முட்டிக்கால் தட்டின கழுதைக்குட்டி ஒன்றும் வேறே யென்ன செருப்பும் விளக்க

மாருந்தான் கிடந்துச்சு வாய்க்கரிசிக்கிக்கூட விதியில்லே.
வண்ணான் வசனம்—எண்டி இந்தா நீ என்ன நான் சொல்லச்சொல்ல மீரிப்பேசுரே அடிக்கிறேன் பாரு
வண்ணாத்தி வசனம்—சும்மா நிருத்தப்பா.

வண்ணாத்தி அழுதுகொண்டு ஒப்பாரி வைப்பது.

பந்தலிலே தாலிகட்டி பாமனே சாக்ஷிவைத்து—இந்தப்
பழிகாரி கண்ணீறு உங்கள் வாசலிலே ஒரு பாவம் வந்து சுத்தாதோ
நான் சொந்தமின்னு தாலிகட்டி சொக்கரை சாக்ஷிவைத்து—இந்த
தோசி பெந்தன் கண்ணீறு உங்களே சுத்தாதோ பாவம் வந்து
எனக்குசிறு தாலி கம்மாளன் கைவேலே
எனக்கு கழுத்தே பொருந்தாமே—இந்த
சண்டாளன் வாசலிலே நான் கழட்டிவைக்க நாளாச்சே
எனக்கு அழகு சிறுதாலி ஆசாரி கைவேலே
எனக்கொரு அருமை பொருந்தாமே—இந்த
பழிகாரன் வாசலிலே அவிழ்த்து வைத்தேன் பெட்டியிலே
எனக்கு சந்திரபுரை சிறுதாலி சரியான கைவேலே
இந்தச் சண்டாளன் வாசலிலே தட்டிக்கழட்டாமே
என்னைப்பெற்ற பாதகத்தி ஆத்தா தானே கழட்டிவிட்டேன்.

வண்ணாத்தி வசனம்—சரி எங்களுடைய ஞாயத்தைக் கோட்டையிலே மகாராஜாவிடம் போய்ச்சொல்லி விசாரிக்கும்படி செய்கிறேன் இதோ துணிகளே காயப்போடுகிறேன்.
கண்ணாடி சன்னல் வசனம்—ஓ பட்டாளம் இதோ சாலிக்குளம் வந்துவிட்டோம். அதோ தெரிகிறது ஊமத்துரை கோட்டை.
வண்ணாத்தி வசனம்—ஏ துரைகளே! துணிகளே மிதிக்காதீர்கள்.
துரை வசனம்—ஏ பொம்பிளே நீ யாரு? ஊமத்துரை கோட்டையிலே யாரு
வண்ணாத்திவசனம்—என்ன கோட்டையிலே இருக்குது சும்மாயிருக்குது பொம்பிளே இடத்தில் என்ன பேச்சு? நீ போரியா யில்லையா?
துரை வசனம்—போக முடியாது. ஏ பட்டாளம் சுற்றி வளையுங்கள்.
வ-தி வசன—வடநாடு விட்டு தென்னாடு வந்தவளே தாயே தற்சமயம் இந்த பட்டாளத்தை ஜெயிக்கவருள் புரிவாய் தாயே என் ஊர்போக பாதையில்லே.

# கட்டபொம்மு துரை

சக்கம்மாள் தோத்திரம். வண்ணாத்தி தரு தன்னன பாட்டு

இளந்தமுள் கோட்டையாளே சக்கம்மாளே யேரிட்டுப் பாரம்மா
(யிந்தவேளை

மூங்கி வனத்தில் பிறந்தவளே முன் நிற்கவே ணுமே சக்கம்மாளே
காஞ்சி வனத்தில் பிறந்தவளே காப்பாற்ற வேணுமே சக்கம்மாளே
பெத்திலிபட்டியாம் பேராபட்டி பேர்போக வாழ்ந்தாயே சக்கம்மாளே
என்ன குறைவுகள் செய்தாரம்மா எங்கள் மகாராஜா கோட்டையிலே
கோட்டைக்கனர்த்தங்கள் வந்திட்டதே கொற்றவளே தாயே பெற்ற
(வளே

நாட்டுக்கனர்த்தங்கள் வந்திட்டதே நாங்களென்ன செய்வோம் பெற்ற
(வளே

கம்பள திலக சக்கம்மாளே சுவைக்கப்பு முன்னே வந்து நில்லு

வசனம்—இதோ பட்டாளத்தை சக்கதேவியின் கிருபையால் அடித்துத் துரத்திவிடுகின்றேன்.

ப-ம் வசனம்—எ பட்டாளம் இந்த பொம்பிளை பொல்லாத பொம்பிளை

வண்ணாத்தி தரு

என்னைப்போலொற்றதோர் பெண்மயிலே யேக பராபரி சக்கம்மாளே
பட்டாளம்வந்து வளைந்ததையோ பாதுகார்க்கவேண்டும் இந்தவேளை

ப-ம் வசனம்—எ பட்டாளம் இந்த பொம்பிளை பொல்லாதவள். நொருக்கு அவளை.

கெ-வசனம்—ஓ பட்டாளர்! வாருங்கள். எட்டியாபுரம் நாடிச் செல்லுவோம் வாருங்கள்.

எட்டியாபுரம் ஜமீன் வருதல்

பட்டாளம் வசனம்—யாரோ ஒரு பொம்பிளே படைகளை விரட்டியது. பொம்பிளையென்று நாங்கள் விட்டு விட்டோம். கோட்டையை நாடிச் செல்லவேண்டும்.

ஜமீன் வசனம்—துரைகளே அவ்விதம் போகப்படாது. ஆரக்குளம் கண்மாய்க்கும் அவன் கோட்டைக்கும் சுரங்கம் இருக்கின்றது. நான்கு புரத்திலும் கண்மாயை வெட்டி நன்றாய் தண்ணீரை வடித்துவிட்டு 4—5 வண்டி மிளகாய் வத்தலைக் கொண்டு வந்து கிச்சுக் குடுக்கை வைத்து அடித்துவிடுங்கள். இறந்துபோய்விடுவார்கள். பின்னடி பார்த்துக்கொள்ளுவோம் துரைகளே.

ஊமை வருகுதல்—தரு

யென்னையாண்டவளே சக்கம்மாளே எங்களை காத்திட வேண்டுமம்மா
போடியாண்டவளே சக்கம்மாளே பொல்லாத வம்பியே வீரமல்லு
வருதி கொடுத்தாயே சக்கம்மாளே வலசக் கூடைமேல் வந்தவளே

ஊமை வசனம்—பூச்சி வண்ணாத்தி! என்ன அழுகுரலுடன் ஓடி வந்திருக்கின்றாய்?

வண்ணாத்தி வசனம்—ஆம் மகாராஜா தெரிவிக்கின்றேன்.

ஊமை வசனம்—தெரிவிப்பாய்.

வண்ணாத்தி தரு தன்னன பாட்டு

என்ன சொல்வேன் ஊமை பாண்டியரே எந்தனை பட்டாளம் செய்த (துன்பம்
சாலிகுளம் நாடிச் செல்லும்போதே சாய்ந்து வரக்கண்டேன் கும் (பினியார்
கோட்டைக்கனர்த்தங்கள் வந்திட்டதே கொற்றவரே நாமு மென்ன (செய்வோம்

ஊமைவசனம்—அடே பெட்டிபகடை சட்டிபகடை பட்டாளங்கள் எட்டியாபுரம் வந்திருக்கின்றதாம். இதர்க்கென்ன யோசனை

பகடைகள் வசனம்—மகாராஜா அதர்க்குத்தகுந்த யோசனை செய்கின்றோம். நீங்கள் அரண்மனையிலிருங்கள். இதோ சென்று வருகின்றோம். ஆகையால் சக்கம்மாளை உச்சரித்து தாங்களுடைய வாளை வாழ்த்திக்கொடுங்கள்.

ஊமை வசனம்—பகடைகாள் சென்றுவாருங்கள்.

திரியாட்டம்

பெட்டிப்பகடை சட்டிப்பகடைகள் திரியெடுத்து ஆடுகின்றார்கள்.

பகடைகள் தரு

கன்றெரிந்து கனிவடித்த கோவிந்தா—கண்ணனே வா முகுந்தா
குன்றெடுத்த தாயருக்காய் கோவிந்தா—குடையாய் பிடித்தவனே
சண்டாள கம்சனையும் கோவிந்தா—சகடாய்ப் பிளந்தவனே
வண்டார்விழி சீதைக்காக கோவிந்தா—வனத்தில் மான் துரத்தியவா
வில்லை வளைத்தவனே கோவிந்தா—கல்லைப் பெண்ணாக்கினோனே
கோரரூப தாடகையை கோவிந்தா—மாருபட யெய்தவனே

# கட்டபொம்மு துரை

அண்ட மளந்த கண்ணு கோவிந்தா—ஆயர்மனே சென்ற வண்ணு (முகுந்தா
கக்கத்திலேகம்பிளியாம் உனக்கு—கடவாயில்சீங்குளலாம் கோவிந்தா
சுற்றிவருங் காராவெல்லாம் கோவிந்தா—சுரக்கியான கீதங்கண்டு
பற்றிவரும் காராவெல்லாம் கோவிந்தா—பால கிருஷ்ணன் ஓசை [கேட்டு
கோணமான நாமங்கள்ாம் கோவிந்தா — கோமாளி ஆட்டங்களாம் [கோவிந்தா

ஷ தரு

காகத்தைக்கண் வாங்கிவிட்ட பெருமானே
கம்சனே நெஞ்சைப்பிளந்த பெருமானே
ஏழு மராமரத்தையெய்த பெருமானே
வாலி தனக்கு மோக்ஷமீந்த பெருமானே
காளிங்கன் தன் மடுவில் நர்த்தனம் செய்தோனே
கர்மவினை நீக்கவந்த யெங்கள் பெருமானே

ப-ம் வசனம்—ஏ தெய்வம் எங்களுக்கு குரிசொல்லு பார்ப்போம்.

பகடைகள் சொல்லுகிறுர்கள் தரு

அய்யா வடக்கே நல்லதுரையே வெகுதூரம் அய்யா வெகுதூரம்
நீங்கள் வர்ழ்ந்த ஆரு சென்னைமா நகரம்
கட்டன் ஊமை மீட்டங்கிக்காய் ரைட்டன் மீட்டங்கிக்காய்
பாஞ்சை கடுகிவந்து துரையே போனுர்

ப-ம் வசனம்—ஓ தெய்வம் வாஸ்துவம்தான். இன்னும் சொல்லு பார்ப்போம்.

தரு

பாதருக்காய் அம்மாக் காலன்வந்து துரையே காலன் வந்து
இங்கு வந்து அய்யா போனதுண்டா

ப-ம் வசனம்—ஓ யெஸ் யெஸ் இன்னும் சொல்லு பார்ப்போம்

தரு

கண்டாங்கி மேஷர் வந்து துரையே மேஷர் வந்து
அந்தக் கட்டனையும் துரையே தூக்கிவிட்டார்

ப-ம் வசனம்—ஓ ஆமாம் ஆமாம் இன்னும் சொல்லு பார்ப்போம்

பகடை வசனம்—துரைகளே இன்னும் சொல்ல வேண்டுமே
நான் வந்து ரொம்ப நேரமாகுது. இதோ மலையேரப் போகின்றேன.
கேட்டுக்கொள்ளுங்கள்.

ப-ம் வசனம்—தெய்வம் சொல்லு.

தரு

அந்த ஊமையாவே பிடிக்கவென்றால் பட்டாளம் பிடிக்கவென்றால்
நீங்கள் ஒன்றுபோலே டேராவில் ஒளியவேண்டும்

பகடைகள் தரு

பட்டாளம் வெரட்டவே நாங்கள் துணிந்தோம் பாதுகார்க்கவேண்டும்
[சக்கம்மாளே
கும்பினி வெரட்டத் துணிந்துகொண்டோமம்மா கூடத் துணையிரு
[சக்கம்மாளே
வெள்ளையரை வெரட்டத் துணிந்தோமே தாயே வெடி முனையிலே
[வந்து நில்லு

பெ ப வசனம்—அடே தம்பி சக்கம்மாள் அருளால் பாதி பட்டாளம் பின்னடைந்து விட்டதே யென் செய்வோம். பாதி மயக்கப்பட்டிருக்கிறார்கள்.

க ப வசனம்—அண்ணு பெட்டிப்பகடை வா நாங்கள் மகாராஜாவிடம் தெரிவிப்போம்.

சரிவா அப்படியே தெரிவிப்போம்

ப-ம் வசனம்—பட்டாளங்காள் வாருங்கள் எட்டியாபுரம் ஜமீன் சொன்ன பிரகாரம் ஆரக்குளம்கண்மாயை நான்குபுரத்திலும் வெட்டி தண்ணீரை வடித்துவிட்டு மிளவாய் வத்தலும் கருமருந்தும் சேர்த்து கிச்சுக் குடுக்கை அடித்துவிடுவோம். கோட்டைக்குள்ளே மாண்டு போய்விடுவார்கள். பின்பு பார்த்துக்கொள்வோம்.

கட்ட கருப்பன் வசனம்—மகாராஜா கும்பினியார்கள் ஆரக்குளம் கண்மாயில் கருமருந்தும் மிளகாய் வத்தலும் வைத்து கிச்சுக் குடுக்கைகள் அடிக்கின்றார்கள். புகைகள் வந்து உள்க்கோட்டை நிறைந்து போய் விட்டது. இதோ நான் மண் வைத்து அடைக்கின்றேன்.

ப-ம் வசனம்—ஓ பட்டாளங்காள் யாரோ ஒருவன் ஓடி வருகின்றான். அவனை சுட்டு விடுங்கள்.

கருப்பணக்குடும்பன் வசனம்—ஆ! சக்கதேவி இதோ குண்டடிபட்டு இறந்துபோய்விட்டேன்.

[ஊ]மவசனம்—அக்காள் வெள்ளையம்மாள் இதோ கும்பினியார்கள் இச்சுக்குடுக்கை வைத்து விட்டார்கள். இனி நாம் மீளமுடியாதுயெனது மைத்துனன் முத்தையாபாண்டியரை யழைத்து இதனை ஆலோசிக்க வேண்டியதிருக்கிறது. அக்காள்

ஊமவசனம்—மாப்பிள்ளை முத்தையாபாண்டியா யிந்த பட்டாளங்கள் நம்மை மீள ஓட்டார்கள் ஆகையால் யிதற்கென்ன யோசனை?

முத்தையா வசனம்—மாப்பிள்ளை ஊமத்துரை பாண்டியா யிந்த கோட்டைக்கிணற்றில் பெண்கள் யாவற்றையும் வெட்டி போட்டு விட்டு கோட்டையைவிட்டு ஓடி விடுங்கள்.

ஊம தரு.

கூடப்பிறந்ததோர்பெண்டுகளை கோட்டைக்கிணற்றிலேவெட்டிப்போட
பட்டாவெடுக்ககைகூசுதையோ பாவியான் யென்செய்வேன்சக்கதேவி
வாளெடுக்கையும் கூசுதையோ வல்லவளேயம்மா வீரமல்லு
கொண்டுபொம்முபெற்ற பெண்டுகளும் கோட்டைக்கிணற்றிலே
[மாண்டுபோக
பண்டிலேசெய்த வினைகள்தானோ பாதுகார்க்கவேண்டும் சக்கதேவி
வெட்டத்துணிந்தேன்யான் சக்கதேவி வீரமல் ஒப்புக்கொள் பெண்
[பழிகள்

ஷெ வசனம்—ஆகா சக்கதேவி இச்சண்டாளன் கையால் யென்னுடன் பிறந்த ஐந்து பெண்களையும் வெட்டி விட்டேன். என் அக்காளாகிய வெள்ளையம்மாளையும், யெனதுபாரி முத்தியம்மாளையும் காணேம், யிதோ கோட்டைக்குள்சென்று பார்க்கின்றேன்.

ஷெ வசனம்—அக்காள் யிங்கேவா; நம்மளுடைய தங்கைகளை வெட்டி விட்ட காரணமின்னதென்று தெரியுமா? நாமளுடைய கோட்டைக்கு ஆடவன் யான் ஒருவன்தான் இருக்கிறேன். ஆகையால் யானும் சண்டைக்கிச்சென்று மாண்டுவிட்டால் நாமளுடைய தோக்கலவார் குலத்திற்கீனம் வந்துவிடும். ஆகையால் அக்காளையும் உன்னையும் வெட்ட நினைக்கின்றேன். யென்ன தெரிவிக்கின்றாய்?

வெள்ளை தரு

பட்டத்தரசியாம் வெள்ளையம்மாள் அந்த பட்டாளம் விரட்டாமல்
[சாவதில்லை
கும்பினிபட்டாளம் விரட்டாமலிந்த கொற்றவளென்னுவிபோவதில்லை

மட்டிலடங்காதவெள்ளையம்மாள் விஞ்சை மந்திரம்கற்றதால் லென்ன
[பலன்
அட்டிசெய்யாதடா ஊமையாபாண்டியா வெரட்டுவேன் பட்டாளம்
[முற்றிலுமே

ஊம வசனம்—அக்காள்.

ஷ தரு

மானம்பரிபோச்சே யெந்தனக்காள் மன்னனென்றுயானிருக்கலாமோ
சுத்தவீரத்தன முள்ளவற்கு சொல்லுக்கிடமாச்சே யெந்தனக்கா
கத்திபிடித்ததோர் காவலருக்கு கனம் குறைவாச்சு யெந்தனுக்கு
வாளெடுத்துப்போர்செய் மன்னருக்கு வசைகளுண்டாச்சே யெந்த
[னுக்கு
ஈட்டிபிடித்ததோர் மன்னருக்கு இழிவுண்டாச்சுதே யெந்தனக்கா
சிறைபிடிப்பார்கள் வெள்ளையர்கள் சீர்கெடுத்திடுவார் கும்பினியார்
கொண்டமனைதப்பித் தோடிவிட்டாள் கொன்றுவதைப்பேனா னென்று
[யெண்ணி
யெங்கினும் யான்சென்று ஓடிப்போறேன் யென்னுடன் பிறப்பே
[வெள்ளையம்மாள்

ஊம வசனம்—அக்காள் யென் பெண்டீரும் யான் கொன்று விடுவே னென்று யெங்கேயோ ஓடிவிட்டாள். ஆகையால் நீயும் இவ்விதம் தெரிவிக்கின்றாய் யானினிமேல் அரைக்ஷணம் நிற்கமுடியாது, இதோ எங்கேயாவது சென்றுவிடுகிறேன்.

வெள்ளையம்மாள் வசனம்—இதோ யென் தம்பியாகிய ஊமத்துரை பாண்டியன் தனிமையாய்போகின்றான் யானும் பின்துயர்ந்து சென்று விடுகிறேன்.

ஊம தரு

ஒட்டாங்காடு ஒடங்காடு தாண்டி ஓடிவருகுது பேய்குதிரை
காடுமலைசெடி தான்கடந்து யிதோ கடுகி போகுது பேய்க்குதிரை
குளத்தூரோரமாம் வவ்வாத்தொத்தி கொண்டுபொம்முமக்கள் கண்டு
[கொண்டோம்

வெள்ளையம் தரு

ஒட்டாங்காடு உடங்காடு தாண்டி ஓடிவருகிறேன் னிந்தவேளை
காடுசெடிமலை தான்கடந்து யிதோ கடுகிவருகுதே யென்குதிரை

# கட்டபொம்மு துரை

குளத்தூரோரமாம் வவ்வாத்தொத்தி கொண்டுபொம்முமகள் ஓடி [வாரேன்

ஊம தரு

கீழவயலியாம் மேலக்கரந்தையாம் கிட்டிவிட்டோனா னிருக்கங்குடி
கோலாறுபட்டியும் கண்ணிசேரிஆறு கொற்றவனிதோயான் தாண்டி [விட்டேன்
கோட்டூரு அய்யனார் கோவில்வந்தேனிதோ கொண்டு பொம்முமகன் [ஊமத்துரை

ஊ வசனம்-அக்காள் வெள்ளையம்மாளை இன்னும் காணோமே இதோ இந்த புளியமரத்தின் நிழலில் சற்றுநேரம் உட்காருவோம்.

வெள்ளையம் தரு

கீழவயலியாம் மேலக்கரந்தையாம் கிட்டிவிட்டோனா னிருக்கங்குடி
கோலாறுபட்டியும் கண்ணிசேரிஆறு கொற்றவள்யிதோயான் தாண்டி [விட்டேன்
கொட்டூரு உப்பதூர் அய்யனார் கோவில் வந்தேனிதோ
கொண்டுபொம்முமகள் வெள்ளையம்மாள்

வெ-ம் வசனம்—தம்பி யேன் யிவ்விடத்தில் உட்கார்ந்திருக்கிறாய்.

ஊம-வசனம்—அக்காள் யான் உன்னை திரும்பி பார்க்கும்பொழுது யென்கண்ணுக்கு தோற்றப்படவில்லை. ஆகையால் யான் இவ்விடத்தில் உட்கார்ந்துயிருக்கின்றேன். அக்காள் யான் சற்று யிந்த மரத்தடியில் நித்திரை செய்கின்றேன். குதிரைகளை யிந்த வயலில் அவிழ்த்து மேய விடுவோம்.

வெள்ளையம் வசனம்—தம்பி அப்படியே செய்.

பட்டாளம் தரு

கீழவயலியாம் மேலக்கரந்தையாம் கிட்டிவிட்டோம்நா மிருக்கங்குடி
கோலாறுபட்டியும் கண்ணிசேரி ஆறு கொற்றவனிதோயாம் தாண்டி [விட்டோம்
கோட்டூரு உப்பத்தூர் அய்யனார் கோவில் வந்தோம்
கொற்றவன் ஊமபனைப் பிடிக்க

ப-ம் வசனம்—ஓ பட்டாளம் வாருங்கோ அதோ பாருங்கோ அந்த பொம்பிளையும் ஊமத்துரையும் யிருக்கிறார்கள் பீரங்கி யேத்துங்கள்,

வெள்ளையம்மாள் வசனம்—ஆஹா! இதோ பட்டாளங்கள் நம்மைப்

பின்துயர்ந்து வந்துவிட்டது .மினி நாம் சும்மாயிருக்கலாகாது தம்பி ஊமையாபாண்டியன் நித்திரை செய்கின்ருன். அவன் அப்படியே நித்திரை செய்யட்டும் நான் பட்டாளம் வெட்டுகின்றேன்.

வெள்ளையம் தரு

ஆண்டவளே யெங்கள் தேவதையே ஆதரிக்கவேணும் சக்கம்மாளே
ஒன்பதுகம்பளம் ஆண்டவளே உத்தண்டகாளியே வீரமல்லு
சித்தனேகம்செய்த சக்கம்மாளே தேவியே வாழ்முனே வந்துநில்லு
வெட்டவெளியான பொட்டலிலே பட்டாளம் வந்தென்னே சூழ்ந்த
[தையா
கிட்டிவாயெந்தனே சக்கம்மாளே பட்டாளம் ஜெயிக்க வுதவி செய்ய

ஷை வசனம்—தாயே சக்கம்மாளே யிந்தவேளைவந்து உதவி செய்ய வேண்டும்.

வெள்ளை வசனம்—ஓ பட்டாளம் நீங்கள் யெங்கு வந்தீர்கள் சல்தியில் சொல்லவேண்டும்.

பட்டாளம் வசனம்—யே பொம்பிளே உங்களைபிடிப்பதற்காக வந்திருக்கின்றேன் ஓ பட்டாளங்காள் பீரங்கி யேந்துங்கள்.

வெள்ளையம் வசனம்—ஓ பட்டாளம் யெங்களை பிடிப்பதற்காக வந்திருக்கின்றீர்களாக்கும் சரி இருக்கட்டும். வடநாடுவிட்டு தென்னாடு வந்தவளே இதுசமயம் இந்தபட்டாவாளில்நின்று தர்க்காக்கவேண்டும்.

வெள்ளையம்மாள் தரு

பட்டாவாளுக்காகவே யான்பிறந்து படைகள் பட்டாளம் வெரட்ட
[அஞ்சுவேனே
கோட்டைக்காகவே யான்பிறந்து இந்த கும்பினுக்குப் பயந்தோடுவே
[னே
அரசுக்காகவே யான்பிறந்து யிந்த அற்பச்சண்டைக்குயான் அஞ்சு
[வேனே

பட்டாளம் வசனம்—யே பட்டாளம் இந்த பொம்பிளே வெரட்டி போடுவே சொல்லுது, ஆகையால் நாமள் எப்படியாவது இவர்களைப் பிடித்துபோக வேண்டும். இல்லாவிட்டால் நாமளுக்கு சின்னச்சம்பளம் போடுவாங்க.

வெ-ம் வசனம்-யே படைகளே எப்படியாவது பிடித்துத்தான் செல்ல வேண்டுமாக்கும். சரி உங்களே யென்ன செய்கின்றேன் பார்.

ஷை தரு

பட்டாளம்முற்றிலும் வெரட்டிடவே பாதுகாரம்மா சக்கம்மாளே
கூட்டபட்டாளம் வெரட்டிடவே கூடத்துணையிரு சக்கம்மாளே
எத்தனைபட்டாளம் வந்திட்டாலும் நானும் எதிர்த்துசண்டைகள்
[செய்வேனையா
பட்டாளம்முற்றிலும் வெரட்டிவிட்டேன் பட்டத்தரசியான் வெள்ளை
[யம்மாள்

ஊமை வசனம்—அக்காள் வெள்ளையம்மாள் தாங்கள் எவ்வளவு சுத்த வீரத்தனமாயிருந்தபோதிலும் பெண்பாலாச்சுதே. ஆகையால் நீ தனிமையாய் பட்டாளம்வெரட்ட செல்லலாமா? சரி இருக்கட்டும் குதிரையின்பேரிலேருங்கள் செல்லுவோம்.

வெள்ளையம்மாள் வசனம்—தம்பி அப்படியே செய்வோம்.

ஊம தரு தர்க்கம்

நல்லநாய்க்கனின்பட்டி தேடிஅக்காள் நாமள் குதிரையும் போகுதுபார்

வெ-ம் வசனம்—ஆகா தம்பி தவரி விழுந்துவிட்டேன் ஓடிவா.

ஊமை வசனம்—அக்காள் குதிரையின்காலில் உன்தலை ரோமமானது சிக்கிக்கொண்டது ஆகையால் அறுத்துவிடுகின்றேன்.

வெ-ம் தரு

கவரிமான்போன்றதோர் கூந்தலதை கத்தியாலறுக்க யென்விதியோ

ஊமை தரு

அப்படியல்லவே யெந்தனக்காள் ஆபத்திற்கென்செய்வோம் யென்பிறப்
[பே

ஷை வசனம்—அக்காள் அவ்விதமல்ல தனக்கு ஆபத்துநேரும் காலத்தில் உயிரையாயிழந்து விடுகிறது.

ஷை தரு

உன்கையாலென் கூந்தலையறுக்க உலகம்பொருக்குமோ யென்பிறப்பே
ஊரவினர்க்கார்போய் சொல்வார்கள்க்கா ஒன்றும் நீயஞ்ச வேண்டா
[மக்காள்

வெ-ம் தரு

உடல்பொருளாவி பெரிதல்லவே உத்தமிகள் மானந்தான் பெரிது

ஊமை வசனம்—அக்காள் அல்லது யிந்தக்குதிரையின் காலையாவது வெட்டிவிடுகிறேன்.

வெ-ம் வசனம்—தம்பி வாயில்லா ஜீவனுச்சுதே அதன் காலை வெட்டுவதைப் பார்க்கிலும்

ஷை தரு

பரிபாவம் பொல்லாதடா பாண்டியனே பாவையென் னுடனிதை
[வெட்டிவிடு

ஷை வசனம்—அப்பா ஊமத்துரை யென்னையும் பென் குதிரையை
யும் யிவ்விடத்திலேயே வெட்டி அடக்கம் செய்துவிடு.

ஊமை வசனம்—அக்காள் யிதோ உன்னை வெட்டிவிடுகின்றேன்.

ஊமை தரு

பட்டவாளெடுத்து வெட்டிவிட்டேன் பட்டம் ஆளவந்த பெண்மயிலை
கட்டழகி யென்னுடன் பிறப்பை இந்த கத்திக்கிறையாக வைத்து
[விட்டேன்

ஊமை வசனம்—இதோ வெள்ளையம்மாளையும் குதிரையையும் அடக்
கம் செய்துவிட்டேன். எங்களுடைய சந்ததி யிவ்விதமாகுமென்று
யான் கனவிலுமறியேன்.

ஊமை தரு

ஆதிமனோன்மணி சக்கம்மாளே ஆயிரம் கம்பளம் ஆண்டவளே
வடக்கேபிறந்திங்கு வந்தவளே வல்லவளேதாயே வீரமல்லு
செல்லபொம்மனுடன் வந்தவளே சேயர்கள்சண்டைமுன் நின்றவளே
முன்னும்கெடுத்தானே தானாவதி பின்னுங்கெடுத்தானே பிள்ளைமகன்
அடுத்துக்கெடுத்தானே தானாவதி பிடித்துக்கொடுத்தான் கோட்டை
[களை

ஒண்டிப்பநாய்க்கனூரையடுத்து உத்தமன் பாண்டியனிதோபோறேன்

சேடர்கள் வசனம்—ஓரே அப்பாரெட்டி இக்கடாரா யேமிரா அப்பா
வாடா தரிகள் செய்வோம்

ஷை வசனம்—அப்படியே செய்வோம் வாங்கடா வாங்க.

தரி நெய்கிறார்கள்.

ஊமத்துரை வருகின்றான்.

ஊமை தரு

வேப்பிலைக்காரியே வீரமல்லு வேதபுராணியே சக்கம்மாளே
தோக்கலவார்குலம் காத்தவளே தோகைமயிலாளே வந்தருள்செய்
காத்தகுடிகளை காக்காமலே கைவிட்டகன்றாயே சக்கம்மாளே

# கட்டபொம்மு துரை

ஊமை வசனம்—அய்யா ரெட்டிமார்களே எனக்கோ பசி ரொம்ப அகோரமாயிருக்கிறது. யாதேனும் கொஞ்சம் ஆகாரமிருந்தால் கொடுங்கள் அய்யா.

சேடர்கள் வசனம்—அய்யா யெங்களிடம் யிந்தப்பசைக்கஞ்சிதான் யிருக்கிறது. கொடுக்கவா.

ஊம வசனம்—அய்யா சேடர்காள் கொஞ்சம் கொடுங்கள்.

ஊம வசனம்—அய்யா இதோ சென்று வருகின்றேன்.

ஊம தரு

கூதலப்புரம் தேடியல்லோ கொற்றவன் நான்போறேனிந்தவேளை
மட்டிலடங்கா மலைசெடி காடுகள் விட்டகன்றுமே போறேனிதோ
பச்சைவுதிரம் குடித்தவளே யம்மா பாஞ்சாலி வந்தருளிந்தவேளை

## கூதலபுரம் ஓட்டைமடம்.

குடும்பன் வசனம்—சாமி! அந்தா பாருங்கோ ஊமத்துரை என்கிறவர் வருகிறார் பார்த்தீர்களா

அய்யர் வசனம்—அடே குடும்பா எங்கேடா வருகின்றான்?

குடும்பன் வசனம்—அதோ பாருங்கள் சாமி!

அய்யர் வசனம்—அடே குடும்பா! நீங்கள் சகலரும் சென்று எந்த விதமாவது தந்திரம் செய்து பிடியுங்கள். நான் இதோ வருகின்றேன். வண்டா ஆயிரம் ரூபாய் வருவதை கெடுப்பானேன்.

குடும்பன் வசனம்—ஆகட்டும் சாமி இதோ போய் பிடிக்கிறோம். நீங்கள் வாருங்கள், யே நீ யாரப்பா? எங்கே போறே? நில்லு நில்லு நில்லப்பா

ஊமைவசனம்—அடே பைத்தியக்காரக்குடும்பர்களே! நீங்கள்நினைத்து வந்த விதம் எனக்குத் தெரியும். நீங்கள்தானா என்னைப் பிடிக்கிறவர்கள் போங்கடா பைத்தியக்காரப்பயலே

ஷை தரு

கட்ட கருப்பணன் சந்ததியென்றுமே வெட்டிடலாகாதென்றே நினைத்
(தேன்
அட்டக்குடும்பரே வெட்டி மடிக்கிறேன் தோக்கலவார்குல பாண்டிய
(னும்

# பாஞ்சாலங்குரிச்சி சரித்திரக்கதை

கண்ணுக்குள் சிவனிருந்தாலும் பயல்காள் கம்பள வீரமும் குன
(றுமோதான்
ஊக்கம் குடுத்த புரோகிதவய்யனை ஒரே வெட்டாயிதோ வெட்டி விட்
(டேன்

ஷிவசனம்—சகலரும் மாண்டுபோய்விட்டார்கள். இந்த ஒட்டைமண்டபத்தில் சற்று நேரம் நித்திரை செய்வோம்.

ஷிவசனம்—ஆஹா அதிகநேரம் நித்திரை செய்துவிட்டோம்.

ஊம தரு

கண்டப்ப நாயக்கனூர் தேடியல்லோ கட்டழகன் போரேன் பாண்டிய
(னும்
மட்டிலடங்கா பசியாகுதே மன்னன்யானென்செய்வேன் சக்கம்மாளே
என்னையாண்டவளே சக்கம்மாளே ஏது குறைகள் செய்தேனம்மா

வசனம்—இதோ இந்த கண்டப்ப நாயக்கனூர் மலையில் குதிரையை மேய விட்டுவிட்டு நாம் இந்த வேப்பமரத்தின் அடியில் சற்று சயனிப்போம்.

சுப்பையா நாயக்கர் ஜமீன் தரு

அதிபலதீரவீர சூரணைவோர்களுமே வாருங்கள்
பதியெல்லாம் புகழ் மலைமீதேரிப்பாய்ந்து வேட்டையாடுவோம்.

சு-நா வசனம்— வேட்டைக்காரர்களே! அதோ பார்த்தீர்களா மலையின்மேல் ஓர் புலியானது படுத்திருக்கின்றது.

தரு

அதோ பாருங்கள் வரிப்புலியொன்று மலையின்மீதூங்குது
அதாகதயாகும்படி அடுத்து வெட்டுவோம் வாருங்கள்

சு-கா வசனம்-வேடர்காள் ஆஹா பாஞ்சாலங்குரிச்சி ஊமத்துரையின் குதிரையையல்லவோ வெட்டிவிட்டோம். இனி அவன் நம்மைக் கண்டால் உயிருடன் வைத்திருக்கமாட்டான். வாருங்கள் ஓடிவிடுவோம்

ஊம வசனம்—ஆஹா! குதிரையை எந்தச் சண்டாளனோ வெட்டிவிட்டான் என் செய்வேன். ஆ சக்கதேவி! இந்த சண்டாளன் எனிந்தக் குதிரையின் மீதிலேறிக்கொண்டு திரிகிறனென்று உனக்கு அதுவும் சம்மதமில்லையோ தேவி,

ஷ தரு

மன்றிளந்து பெண்டிளந்து மருநாட்டினிலே வந்து
கன்றிழந்த பசுவானேன் கம்பள சக்கதேவி

வசனம்—ஆஹா! ஜெகத் ரக்ஷகி! அந்தப் பாஞ்சாலங்குரிச்சியையு மிழந்து எனதுசேனேகளாகிய ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம் யாவற் றையுமிழந்து எனதுடன்பிறவியாகிய அண்ணன், அக்காள், தங்கை இவர்கள் யாவற்றையு மிழந்ததுவு மன்றி என் உயிருக்குயிராகிய பேப்க்குதிரையு மிழக்கச் செய்தாயே தேவி.

ஷ தரு

முந்தியான் செய்தவினை மூண்டதோ என்தலையில்
அந்திவேளை யாச்சுதையோ அடுத்தவூ ரேகிப்போறேன்

பெரியமுத்திருளி தில்லேலே பாட்டு

பருத்தி களை நானெடுக்கத் தில்லேலேலோ—யிங்கு
பள்ளி மகள் வந்தேனையா தில்லேலே
குல்லப்புரம் நானிருப்பு தில்லேலேலோ—பள்ள
குடும்பன் மகள் முத்திருளி அல்லிலேலோ

ஷ வசனம்—இந்த பருத்திக்காட்டில் புல் கோரை அதிகமாய் இருக் கிறது. இதோ களை எடுக்கின்றேன்.

பாரிலே கூவலானேனே என்ற மெட்டு (ஊமத்துரை)

தெட்சணு பூமி வாழ்மாது தேவி சக்கம்மா ளென்மீது
பட்சமில்லாத தேனேது பாரினில் என்மே லேன்வாது

ஷ தரு

குற்றமே செய்தரியேனே கோட்டைக் கிணற்றிலே நானே
மற்றவரை துதி யேனே மண்டலம்தன்னிலே நானே

ஊம வசனம்—யாரோ ஒரு பெண்பிள்ளை பருத்திக் களையெடுத்துக் கொண்டிருக்கின்றாள். யாரென விசாரிப்போம்.

அடி பெண்ணே நீ யார்?

முத்திருளி வசனம்—மகாராஜா! வந்தனம். யான் கெவுனகிரி சின்ன முத்திருளி அக்காள். என் பேர் பெரிய முத்திருளி. மகாராஜா வாருங்கள் நமது வீட்டுக்கு வந்துவிட்டுப் போகலாம்.

ஷ வசனம்—மகாராஜா! முத்தணக்கோனுர் வீட்டில் சாப்பாட்டுக்கு

ஏற்பாடு செய்கின்றேன் சாப்பிடுங்கள்.

ஊமை வசனம்—முத்திருளி! சாப்பாடு வேண்டாம். சற்று நேரம் நித்திரை செய்கின்றேன்.

போசன் துரை வசனம்—ஓ பட்டாளங்காள்! இந்த வீட்டிலே இருப்பானென்று பெட்டப்பர் சொன்னது. இங்கேதான் இருக்கவேண்டும்,

ஷை வசனம்—யே பொம்பிளை! இங்கே ஊமைத்துரை இருக்கிறது.

முத்திருளி வசனம்—யே யாரப்பா ஊமைத்துரையுங்காணோம்; செகுட்டுத்துரையும் காணோம். துரைகளோ இங்கே ஒருவருமில்லை. என் புருஷனுக்கு அம்மை வார்த்திருக்கிறது. போய் பார்த்துக்கொள்ளுங்கள்.

துரை வசனம்—ஓ பட்டாளம் இங்கே காணோம். வாருங்கள் அடுத்த ஊர் போவோம்.

ஊமை வசனம்—முத்திருளி! யான் நித்திரையில் ரொம்ப அயர்ந்துவிட்டேனே. இதென்ன திரேகம் பூரவும் ஆபாசமாயிருக்கிறது.

முத்திருளி வசனம்—மகாராஜா! தாங்கள் நித்திரை செய்யும்போது பட்டாளங்கள் தங்களை தேடி வந்தார்கள் அதற்காக தாங்கள் திரேகம் பூரவும் கன்றுய் மூடி கருப்புக்கட்டியை கரைத்து தெளித்து என் வீட்டுக்காரருக்கு அம்மைவார்த்திருப்பதாகத் தெரிவித்தேன். ஆகையால் பட்டாளங்கள் வந்து பார்த்து சென்றுவிட்டார்கள் மகாராஜா.

ஊமை பாட்டு

இந்தவித மோசம் செய்வாயென்றால் உந்தன் வீட்டில் தங்க மாட்டேனடி

அடித்துக் கெடுத்தாயே முத்திருளி ஆண் வீரம் போக்கிறைப் பள்ளி (மகள்

ஜாதிக்கேற்றபுத்தி தானேயல்லால் போதித்தால் வருமோ வேறுபுத்தி

எதுக்கு இல்லையென்றே யுரைத்தாய் வாதிக்கு தென்மனம் முத்திருளி

கண்டால் யான் சும்மா விடுவேனோடி படைகளை விரட்டி விடுவேனடி

யான் சும்மா விடுவேனோடி என் பட்டாவாமுக்கிரையாக்குவேண்டி

சீ சீ யென்முன்னே நிற்காதே போடி செல்கின்றேன் வேருரு நானே (யோடி

முத்திருளி வசனம்—இது நல்லதுக்கு காலமல்ல. பட்டாளங்கள்

வந்து பிடித்துக்கொண்டு போய்விடுவார்களேயென்று யான் ஒளித்து வைக்க மகாராஜா என்மேல் கோபித்துக்கொண்டு போய்விட்டார். இது என்காலம் சரி இருக்கட்டும்.

ஊமை பாட்டு [தசரத என்ற மெட்டு]

பாஞ்சை நகராள் சக்கதேவி
வனமேவி யானோர் பாவி யழுதேன்கூவி (பாஞ்சை
காஞ்சமுள்வேலிக் காரி கம்பலதிகாரீ
வாஞ்சையென்மீதில் கொள்ளா தேனோவுதகாரி
வனத்திலே யானலைய விதியோ காலக்கதியோ
எவர் சதியோ இது நீதியோ (பாஞ்சை

ஊமை வசனம்—ஆகா! இக்கொடிய மல்லப்புரங்காட்டிலலைந்து வருந்தும்படி செய்தனையே தேவி யென்செய்வேனம்மா

வீரணக்கோனர் வசனம்—அடேடே அந்த ஆட்டைப் பத்துடா

ஷை வசனம்—அடேடே காட்டுக்குள்ளே போயிருக்குடா. வக்கா லோளிபயபிள்ளை சொன்னு கேட்குதில்லை ஒரு யானைக்கூழ் குடிக்குது

கருப்பன் வசனம்—அடே வீரணன் யாரோ ஒருவன் கத்தியும் கித்தியும் கொண்டு கிட்ட வர்ராண்டப்பா வேகமாக யென்ன செய்யப் போகிறானோ இந்தபயபிள்ளை

ஊமை வசனம்—அய்யா ஆட்டுக்கிடை கார்க்கும் கோனர்களே கொஞ்சம் கூழிருந்தால் ஊத்துங்கப்பா.

கருப்ப வசனம்—அடே வீரணே அய்யோ பாவம்! இரண்டு மூன்று கை கூழிருக்கும்போல் தெரிகிறது. அதை எடுத்து ஊத்துடா குடிச்சிட்டுப் போகட்டும்.

லாட்டன் துரை வசனம்—யே பட்டாளம் அந்தா நிற்கின்றான் ஊமத்துரை சுற்றி வளையுங்கள்.

ஊமை வசனம்—ஆ சக்கதேவி பட்டாளங்கள் வந்து நிற்கின்றதே என் செய்வேன் தேவி சரி இருக்கட்டும் துரைகளே எங்கே வந்தீர்கள்:

லாட்டன் வசனம்—ஊமத்துரை! நாங்கள் உன்னை பிடிப்பதற்காக வந்திருக்கின்றோம்.

ஊமை வசனம்—ஒ துரைகளே! என்னைப் பிடிப்பதற்காக வந்தீர்களாக்கும். சரி இருக்கட்டும். சக்கதேவி! உன் கிருபைதான்.

ஊமத் தரு (சக்கம்மாள் தோத்திரம்.)

தோளில் வளையலணிந்தவளே தோக்கலவார் குலம் கார்த்தவளே
பாப்பாரபாசி யணிந்தவளே பாது கார்க்கவேண்டும் சக்கம்மாளே
மூன்றுகை கூழுண்டேன் சக்கம்மாளே மூன்னூறுபட்டாளம் வெரட்ட
(வேண்டும்
பட்டா முனையிலே வந்து நின்று நீயும் பாதுகார்க்கவேண்டும் சக்கம்
[மாளே

வசனம்—வடநாடு விட்டு தென் நாடு வந்தவளே இது சமயம் தமய னுடைய பட்டா வாளில் நின்று பட்டாளத்தை வெரட்ட அருள்புரிய வேண்டும் தேவி. துரைகளே!

ஊம—தரு

எட்டி நடவுங்கள் பட்டாளங்காள் வெரட்டிவிடுவே நான் ஊமத்துரை

பட்டாளம்—தரு

என்றிருந்தாலுமே கும்பினிபார் கொன்றிடுவார் குண்டு துப்பாக்கி
[யால்
வேறொருவர் பகையானாலுமே நம் வெள்ளைக்காரர் பகையாகாதப்பா
நாட்டார்களின் பகையானாலுமே நம் ராஜரீகர் பகையாகாதப்பா
கோடிஜனப் பகையானாலுமே இக் கும்பினியார் பகையாகாதப்பா
குண்டு வருகுது கண்டொதுங்கு கொற்றவனேயப்பா ஊமத்துரை
குண்டுக்குத் தப்பியே நீ பிழைத்தால் கோடிநாளாயினும் சாவில்லையே
துட்டத்தனங்கள் நீசெய்தாயென்றே துரத்துரோம்நாம்வெள்ளைக்காரர்
வெட்டுகள் குத்துகளேருமோ சொல் வெள்ளைக்காரர்கள் செய் துப்
(பாக்கியில்

ஊம—தரு

எதிர்த்துப்பேசாதே பட்டாளங்காள் இருதுண்டாக பிளந்திடுவேன்
கண்டதுண்டமாக வெட்டுறேன்பார் உன்னை கத்திக்கிரையாக வைக்
[கிறேன்பார்
பட்டாளமெல்லாமும் ஜெயித்துவிட்டேன் பாதுகார்க்க வேண்டும் சக்
(கதேவி

ஷ வசனம்—இந்த மல்லப்புரங்காட்டில் மூன்றுகை கூழ் குடித்து முன்னூறு பட்டாளத்தை வெரட்டி விட்டேன். இதோ குள்ளப்புரம் நாடிச் செல்லவேண்டியிருக்கிறது. இங்கு சற்று படுத்திருப்போம்,

## ஆலம்பட்டி பெரியமுத்தம்மாள் சின்னமுத்தம்மாள்.

பெரியமுத்தம்மாள் தரு—தெம்மாங்கு

பருத்தி எடுக்கையிலே பலநாளும் கேட்டவரே
ஒருத்தி நானெடுக்கையிலே—யே மச்சானே நீ
ஓடிவந்தாலாகாதோ தில்லேலேலே லேலேலோ
மண்வெட்டி தோளிலிட்டு மடை திறக்கப் போறவரே
கும்பிட்டு நானழைத்தேன்—யே மச்சானே நீ
கூடவந்தாலாகாதோ தில்லேலேலே லேலேலேலோ
பருவ வயதிலேநான் பருத்தி புஞ்சை தேடிவந்தேன்
சரிக்கு விளையாடவே—யே மச்சா நீ
சாடிவந்தாலாகாதோ தில்லேலேலே லேலேலேலோ

பெரியமுத்தம்மாள் வசனம்—யாரையா இங்கே படுத்திருக்கிறது?

ஊமை வசனம்—ஏனம்மா யான் தான் ஊமத்துரை.

பெ முத் வசனம்—ஆஹா! பாஞ்சாலங்குரிச்சி மகாராஜாவல்லவோ மகாராஜா வாருங்கள் கிறக்கமாயிருக்கின்றீர்களே நமதுவீட்டில் சாப்பாடு செய்து செல்லலாம் வாருங்கள்.

ஷெ வசனட்—அடிதங்காப் முன்னாடியே கும்பினியார் அறிக்கைசெய்திருக்கிறார்களல்லவா? ஊமத்துரையை பிடித்துக்கொடுத்தவர்களுக்கு 1000 ரூபாய் இனாம்கொடுக்கப்படுமென்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகையால் நாம் கோழி பொன்று வாங்கிவந்து அடித்து கஞ்சா, அபின், மதனகாந்தி பூ இவைகளைச் சேர்த்துக் கொடுத்துவிட்டால் மயக்கமாகிவிடும். அப்போது பிடித்துக் கொடுத்துவிடுவோம்டி.

பேத்துரை வசனம்—யே பொம்பிளே இங்கே ஊமத்துரை இருக்குதாம் எங்கே?

பெ முத் வசனம்—துரைகளே இதோ வீட்டில் படுத்திருக்கின்றார். பிடித்துக்கொண்டு போங்கள். எனக்கு பணத்தைக் கொடுங்கள்.

துரை வசனம்—பொம்பிளே! பணம் தருகின்றேன். இதோ கயர் கொடுக்கின்றேன் அதனால் கட்டிவிடு.

பெ முத் வசனம்—துரைகளே இதோ கட்டிவிட்டோம். பிடித்துச் செல்லுங்கள்.

பேத்துரை வசனம்—ஓ பட்டாளங்காள் இவனைக் கள்வண்டியில் ஏத்துங்கள் திண்டுக்கல் மலையில் கொண்டுபோய் சுட்டுவிடுவோம்.

## பூசாரி கோடாங்கி அடிக்கிற—தரு (பாட்டு)

ஆதி ஓம் ஐங்கரனே—ஆனைமுகா வந்தருள்செய்
பாதிமதியணிந்தோன்—என்னையாண்ட பரமசிவன் தன்மகனே
வாணி சரஸ்வதியே—மறையவனார் தேவியரே
பேணியுனையழைத்தேன்—எளியேனுடநாவில் பெற்றவளே வந்தருள்
(செய்

திருப்பரங்குன்றாரு—சேவர்கொடிகாரா
விருப்பமுற்றே யழைத்தேன்—சதிவேல்கொண்டு வேகமுடன் வா வா
ஆயர்மனைதோரு—அள்ளி வெண்ணெயுண்ட கண்ணா
கோதை யசோதைமகிழ்—ஆதிமகாமூலக் கோதண்டனே வா வா
காஞ்சமுள் வேலி—கட்டிக்குடியிருந்த
பாஞ்சைநகராளே—என்னைப்பெற்று வளர்த்த பாஞ்சாலி வா வா
மண்டை வணங்கினேன்—மாசபையைத் தஞ்சமென்றேன்
குருவை வணங்கினேன்—ஆதிமகாமூலம் குருபாதம்தஞ்சமென்றேன்

## பேய் ஆட்டம்.

மங்கைதனை தொட்ட மணவாளா வா வா
கன்னிதனைத் தொட்ட யென்சாமி கட்டழகா வா வா
பூசாரி வசனம்—நீயாரப்பா இந்த கன்னியைதொட்ட காரணமென்ன
விபரமாய்ச் சொல்லப்பா

முத்திருளி தரு

அண்ணே அண்ணே கோடாங்கி அண்ணே கோடாங்கி
அந்த ஆலம்பட்டி முத்திருளி அண்ணே முத்திருளி
கன்னி பருத்திக்காடு அண்ணே செல்லும்போது அண்ணே செல்லும்
(போது
வாள் பட்டாவொன்று அண்ணே கொண்டுவந்தாள் அண்ணே கொண்
(டுவந்தாள்
அந்தப் பாஞ்சாலங்குரிச்சி ஊமத்துரை கை வாள் ஊமத்துரை இந்தப்
(பளிகாரி அண்ணே
கொண்டுவந்தாள் அண்ணே கொண்டுவந்தாள் அன்றுமுதல் அண்ணே
(இன்றைவரை
கோடாங்கி இன்றுவரை கன்னிக் கானசுகம் இல்லையல்லோ கோடாங்
(கி இல்லையல்லோ

## கட்டபொம்மு துரை

கொத்துநல்ல கோடாங்கி பல்லாரியான் அண்ணே பல்லாரியான் அந்
(தக் கொண்டுபொம்மு
கோட்டை சக்கம்மாள்யான் அண்ணே சக்கம்மாள் யான் வடக்கே
(வெகு கோடாங்கி தூரமடா
அண்ணே தூரமடா அந்த வலசக்கூடைமேலே வந்தவடா நான் வந்த
(வடா
பூசாரி வசனம்—தாயே நீ வடநாட்டிலிருந்து வந்த சக்கம்மாளாக்கும்
முத்திருளி வசனம்—ஆமோ பூசாரி
பூசாரி வசனம்—நீ இந்த கன்னியை விட்டு விலகவேண்டும் என்ன
சொல்ரே
முத்திருளி வசனம்—நான் இந்த கன்னியை விட்டு விலகிவிடுகிறேன்.
கத்தியைக் கொண்டுபோய் காளியம்மன் கோவிலில் போட்டுவிடச்
சொல்லி எனக்கும் பூசைபோடச் சொல்லும்.
பூசாரி வசனம்— சரிதாயே அப்படியே செய்கின்றேன்.

ஊமை தரு

காட்டிக்கொடுத்தாளே முத்தம்மாளும் கஞ்சா அபின் கள்ளின் போ
(தை ஏத்தி
வீட்டிலே எந்தனைக் கட்டியல்லோ பட்டாளம் கைவசம்ஒப்புவித்தாள்
கம்பிக்கைத் துரோகங்கள் செய்தாளம்மா நானென்னசெய்குவேனிந்த
(வேளை
போதை தெளிந்தமீத சக்கம்மாளே போருக்கு பட்டாவாள் காணே
[மம்மா
கண்கள் தெளிந்ததே சக்கம்மாளே வாளைக்காணேமே என்ன செய்
(வேன்
ஊமை வசனம்—ஆகா கொடிய சண்டாளியாகிய அந்த ஆலம்பட்டி வீர
ணத்தேவர் மகள் முத்தம்மாள் இவ்விதம் செய்வாளென்று யான் கிஞ்
சிட்டேனும் நினைக்கவில்லையே. ஆயினுமிருக்கட்டும். தற்சமயம் இந்த
பட்டாளத்தை வெரட்டவென்றால் பட்டாவாளில்லையே சக்கம்மாளே

அசரீரி வாக்கு

அப்பா ஊமைத்துரை இதோ உன்னுடைய பட்டாவாள். இந்தப்பட்டா
வாளை நீ ஒட்டைமண்டபத்தில் தவரவிட்டு வந்துவிட்டாய். நீ இந்தப்
பட்டாளத்தில் பாதி வெரட்டுவாய். பாதி ஓடிவிடும். பின்னாடி உன்

னுடைய இஷ்டம். யானிதோ சென்று வருகின்றேன்.

ஊமத் தரு

பட்டாளத்தினூடே யான்புகுந்தேன் தாயே பாதுகார்க்கவேண்டும் சக் (கம்மாளே

முற்றிலும் வெரட்டி ஜெயிக்கும்வரை அம்மா முன் நிற்கவேண் (டுமே சக்கம்மாளே

பச்சை உதிரங் குடித்திடவா அம்மா பாஞ்சை நகராண்ட வீரமல்லு

ஊம வசனம்—தாயே சக்கம்மாளே இந்தப் பட்டாளங்களை வெரட்டி விட்டேன். இதோ என்னுடைய ஆவியையும் மடித்துக்கொள்ள நினைக்கின்றேன்.

விருத்தம்

அரும்பாய் பிறந்தாலும் அதன் குணம் குன்றினும்
ஆருமே தேவாலயங்கட்கு—செங்
கரும்பாய் பிறந்தாலும் தேவர்முனி யாவர்க்கும்
செய்திடுவார் பாகுசீனி—நல்ல
இரும்பாய் பிறந்தாலும் இனியதோர் கருவிகளுக்கிசையு
மென்றேயுரைப்பார்—நெற்
றரும்பாய்ப் பிறந்தாலும் மிருகாதினங்கள் பசிதீர்த்துள
மகிழ்வடையும்—எவ்
வுருவில்லாமலே இவ் வுருதந்தெனை எங்கவிடுப்
பதழகோ இத்தலம் தன்னிலே கதியாலென்
னுயிரிழக்கின்றேன் சக்கம்மாளே

வாழி—தரு

தோக்கலவார் குலம் வாழி வாழி
சொல்மறை நூல்களும் வாழி வாழி
தேவர் முனிவர்கள் யாவர் வாழி
சித்தர் முத்தர் பக்தர் வாழி
எங்களுக்குத் தீங்கு செய்தவர்கள்
என்றென்றும் வாழாமல் போகவேண்டும்
ஆதி மனோன்மணி சக்கம்மாளே
ஆயிரங் கண்ணுள்ள தேவியரே
பாஞ்சாலங்குரிச்சி கோட்டையிலே
பாதுகாரம்மா நீ வாழி வாழி

பிர்க்கட் வசனம்—ஓ பட்டாளம் இந்தத் திண்டுக்கல் மலையில் அந்த ஊமையன் இங்குதானிருக்க வேண்டும். வாருங்கள் மலையைச் சுற்றிப் பார்ப்போம். ஓ ஓ இதோ செத்துப்போச்சு.

பிர்க்கட்டு ஷை பாட்டு

ஊமத்துரையிங்கு மாண்டுவிட்டான்
ஒளிந்தமேதெ நாமள் சண்டையுமே
இன்னுமவர்களின் சேனைகளும்
இருக்குதாவென் றறியவேண்டும்
எட்டியாபுரத்தை நாடியல்லோ
ஏகுவோம் வேகமாய் சோல்ஜர்களே

ஷை துரை வசனம்—அந்த ஊமத்துரை திண்டுக்கல் மலையில் செத்துப் போச்சுது. இன்னும் அவனுடைய வகையரு யாரும் இருக்கிறார்களா?

ஜமீன் வசனம்—துரைகளே செக்காரக்குடியில் முத்தையா நாயக்கர் வீட்டில் ஊமத்துரை பெண்சாதி முத்தியம்மாளிருக்கின்றாள். அவ

கமீள

பிர்க்கட் வசனம்—ஓ பட்டாளம் வாருங்கள் செக்காரகுடி நாடிச் செல்வோம்.

ஷை—தரு

செக்காரக்குடியும் வந்துவிட்டோம்
சேர்ந்து வாருங்கள் பட்டாளங்காள்
முத்தைய நாய்க்கரைக் கண்டுகொண்டோம்
முன் நடவுங்கள் என் பட்டாளங்காள்

ஷை வசனம்—ஓ முத்தைய நாய்க்கரே! ஊமத்துரை பெண்சாதி முத்தியம்மாளெங்கே?

முத்தையா வசனம்—துரைகளே இங்கே இல்லை.

பிர்-வசனம்—ஓ மேன் பொய் சொல்லுது. ஏ பட்டாளம் இவனைச்சுடு

முத் வசனம்—துரைகளே! வேண்டாம் வேண்டாம் இதோ இருக்கிறாள்.

பிர்க்கட் வசனம்—இந்தப் பல்லக்கிலேரு.

முத்தியம்மாள் வசனம்—துரைகளே இதோ ஏறிவிட்டேன்.

பல்லக்குக்காரன் வசனம்—யேமேகம் தூக்கப்பா தூக்கு யேகேகம்.

# முடிவுரை.

---

ஊமத்துரையின் பாரியை பல்லக்கி லேற்றிக்கொண்டு சென்னைக்கு வந்து சிலமாதங்களில் ஷியாள் வயிற்றில் ஒரே தடவையில் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே கும்பினிச் செல்லம், செல்லம் என்று பெயரிட்டு கவர்ன்மெண்டாருடைய போஷணையில் அவர்களை வளர்த்தும், கல்வி கற்பித்தும் வந்தார்கள். பாடசாலையின் பரீக்ஷை முடிவுற்றதும், பள்ளிக்கூட கொண்டாட்டத்தின்போது பாடசாலையில் பலவிதமான பழங்களும், மிட்டாய் வகைகளும், விளையாட்டுக் கருவிகளும், அநேகவிதமான ஆயுதங்களும் வைத்து பள்ளி மாணவர்களைக் கூப்பிட்டு அவரவர்களுக்கு இஷ்டமான சாமான்களை எடுத்துக்கொள்ளும்படி உத்தரவிட்டார்கள். எல்லோரும் நூதனமான விளையாட்டுச் சாமான்களும், மிட்டாய்களும், பழங்களும் எடுத்துச் சென்றனர். நம் ஊமத்துரையின் மக்கட்களாகிய செல்லங்கள் ஆயுதங்களை எல்லாம் பார்வையிட்டு தமக்கேற்றவாறாய் இரண்டு கத்திகளை எடுத்துக்கொண்டார்கள்.

இதனையறிந்த கவர்ன்மெண்டார் அவ்விரு செல்லங்களையும், அவர்களின் தாயையும் சேர்த்து பாஞ்சாலங்குறிச்சிக் கடுத்த செக்காரக்குடியில் ஓர் அரண்மனை கட்டி அதில் வைத்து அவர்களுக்கு படித்தரமும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

பற்பல ஊர்களிலிருந்து ஜனங்கள் ஊமைத்துரையின் காலத்தில் கட்டிய மண் கோட்டையைப் பார்த்து அகமகிழ்ந்து அம் மண்ணைக் கொண்டுபோய் கோழியின் அடையில் போட்டும், ஜலத்தில் கரைத்து ஆட்டுக்கிடாய்களுக்கும், குழந்தைகளுக்கும் ஊட்டியும் வருகின்றார்கள். இதன் விசேஷம் என்னவென்றால், அந்த மண்ணை உபயோகித்த ஜெந்துக்கள் மிகுந்த பலமுள்ளவைகளாக இருக்குமென்பதே.

திருச்செந்தூராலயம் ஆறுமுகப்பெருமானுக்கு கட்டப்பொம்மு ஊமத்துரையின் அரசாட்சிக்காலத்தில் அநேகவிதமான ஆபரணங்களும், பொருள்களும், விருதுகளும் அர்ப்பணம் செய்துள்ளார்கள்.

தற்காலம் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள சக்கதேவியின் கோவில் அடிச்சுவரையும், யானை, குதிரை, ஒட்டகம் முதலியவைகளைக் கட்

டும் கல்லையும், உரைக் கிணற்றையும், முன்காலத்துக் குட்டிச் செங்கல் சுவர்களையும், தெப்பக்குளப் பள்ளங்களும் காணலாம். மேற்குப் பக்கத்தில் உள்ள கண்மாயின் மண்மேடையில்தான் பீரங்கி வைத்து கோட்டையைத் தகர்த்து சண்டையும் நடத்தினார்கள். சண்டை நடந்து சுமார் 130 வருடங்களாகின்றன. இப்பொழுதும் ஊமத்துரையின் வார்சுகளின் பேரன்மார்கள், அவர்களுடைய சந்ததியார்கள் சக்கதேவியினருளால் வாழ்ந்து வருகின்றார்கள்.

சக்கம்மாளை நினைந்து கோரிக்கை செய்துகொண்ட காரியங்கள் எல்லாம் சித்தியாகிக்கொண்டிருக்கிறது.

தன்னன சந்தம் [வாழ்த்து]

தேவர் முனிவர் ரிஷிகள் வாழி
செஞ்சேவற்கொடி ஷண்முகன் வாழி
ஆவினைமேய்த்ததோர் அய்யன் வாழி
ஆயிரங்கண் கொண்ட ஆத்தாள் வாழி
பார்புகழ் பாஞ்சை நகரும் வாழி
பண்டறிந்த சக்கதேவி வாழி
கட்டன் ஊமத்துரை சந்ததிகள்
கதிர்மதி யுள்ளவரையில் வாழி
பாஞ்சாலிதன் கதை பாடினோர்க்கு
பாவந் தொலையுமே வாழி வாழி

சுபம்! சுபம்!! சுபம்!!!

இரண்டாம் பாகம் முற்றிற்று.